www.padippakam.com

ஈழ தேசம்

மலர் 1 மார்ச் 1996 இதழ் 7

# தீர்வுத் திட்டத்தில் திருத்தம் காண முயல்வது ஏமாற்று வேலையே!



சந்திரிகா

சந்திரிகாவால் முன் வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டம் தொடர்பாக கருத்துக்களையும், ஆலோசனைகளையும் 31-03-96க்கு முன் வழங்கும்படி அரசியல் கட்சிகளையும், அரசியல் ஆலோசகர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார் சந்திரிகா. தீர்வுத் திட்டம் தயாராக இருப்பதாகக் கூறியும் அதனை அறிவித்த இவ்வளவு காலமும் என்ன செய்து கொண்டிருந்தார் என்பது அவருக்கே வெளிச்சம். கருத்துக்கள், ஆலோசனைகள் கேட்பதும், ஒவ்வொரு பெயரில் குழுக்கள், சபைகள் அமைத்து ஆராய்வதும் சிங்கள அரசுகளால் நடாத்தப்படும் முடிவுறாத தொடர் நாடகமாகும் மேற்கண்ட அழைப்பு.

பிரேமதாசா ஆட்சியின்போது அனைத்துக் கட்சிகள் மாநாடு ஒரு வருடமாக நடந்து எந்த தீர்வும் காணாமல் மாநாடு முடிவுக்கு வந்தது. அதன் பின் தமிழ் கட்சிகள் தனித்தனியாக தீர்வு திட்டங்களை முன் வைத்த பொழுது தமிழ் கட்சிகள் மத்தியில் ஒத்த கருத்து இல்லாததால்தான் தீர்வு காண முடியாமல் இருப்பதாக பிரேமதாசா அறிவித்தார். உடனே அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு தீர்வு திட்டத்தை முன் வைத்தனர். முஸ்லிம் மக்களின் பிரச்சனைகள் அதில் உள்ளடக்கப்படவில்லை, ஆதலால் தமிழ் கட்சிகள் முன் வைத்த தீர்வு திட்டம் ஏற்புடையது அல்ல என்றார் பிரேமதாசா. சில முஸ்லிம் தலைவர்களையும், பிரேமதாசா தூண்டி விட்டதனால், அவர்களும் இந்த தீர்வு திட்டத்தை எதிர்த்தனர். முஸ்லிம் கட்சி தலைவர்களை தமிழ் கட்சிகள் அழைத்து பேசியதில் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. தமிழ் முஸ்லிம் கட்சிகள் இணைந்து முன் வைத்த தீர்வு திட்டத்தை சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டால்தான், நானும் ஏற்றுக் கொள்வேன் என்று சொன்ன பிரேமதாசா அந்த தீர்வு திட்டத்தை சிங்கள மக்கள் முன் வைத்து அபிப்பிராயம் கேட்க முற்படவில்லை. மாறாக தந்திரமாக பிரச்சனையை எதிர்க் கட்சியின் தலையில் சுமத்த எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த மங்கள முன சிங்கா தலைமையில் பாராளுமன்ற தெரிவு குழு ஒன்றினை நியமித்து இனப் பிரச்சனைக்கான தீர்வு திட்டத்தை தயாரிக்க பணித்தார். பாராளுமன்ற தெரிவு குழுவால் முன் வைக்கப்பட்ட தீர்வு திட்டம் தமிழர்களுக்கு ஏற்புடையதாக இல்லாததால் அனைத்து தமிழ் கட்சிகளும் அதனை நிராகரித்தனர்.

பிரேமதாசாவின் படுகொலைக்கு பின் பதவிக்கு வந்த விஜயதுங்க நாட்டில் இனப் பிரச்சனை எதுவுமில்லை, பயங்கரவாதம் தான் நிலவுகிறது என்றார். அவரின் பார்வையில் தமிழர்களுக்கு உரிமைகள் அவசியமில்லாத ஒன்றாகவே இருந்தது.

பதவிக்கு வரும் முன்னரே இனப் பிரச்சனையை தீர்த்து வைக்கப் போவதாக உலகை நம்ப வைத்து ஆட்சிக்கு வந்தார் சந்திரிகா. தீர்வு திட்டத்தை புலிகளுடன்தான் பேசுவேன் என்று கொஞ்சக் காலத்தைக் கழித்தார். புலிகளுடனான பேச்சுவார்த்தை எதிர்பார்த்தது போல் முறிந்ததும், புலிகள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளா விட்டாலும் இனப் பிரச்சனையை தீர்த்து வைப்பேன் என்றார். தீர்வு திட்டம் தயாராக இருப்பதாக சந்திரிகாவும், தீர்வு திட்டம் தயாரித்துக் கொண்டிருப்பதாக அமைச்சர் பீரிசும் முன்னுக்குப் பின் முரணான செய்திகள் வெளியிட்டு இன்னும் கொஞ்சம் காலத்தை கடத்தினார்கள். ஒரு வழியாக தீர்வு திட்டத்தின் சாராம்சத்தை அறிவித்த சந்திரிகா சிறிது காலம் சென்றபின், அறிவித்த தீர்வு திட்டத்தில் மாற்றம் செய்து வெளியிட்டார்.

தீர்வு திட்டத்துக்கு ஆதரவு திரட்ட எதிர்க்கட்சிகளுடனும், பௌத்த மத பீடங்களுடனும் பேசி வருவதாக சொல்கிறார் சந்திரிகா. ஆரம்பத்தில் தமிழ் கட்சிகளுடன் தீர்வு திட்டம் குறித்து பேச மறுத்த சந்திரிகா இப்பொழுது கருத்து கூறும்படி கோரியுள்ளார். எந்தத் தமிழ் கட்சிகளுடன் தீர்வு திட்டம் குறித்து பேச மறுத்து உதாசீனப்படுத்தினாரோ, அந்த தமிழ் கட்சிகள் வெட்கங்கெட்டு சந்திரிகாவின் தீர்வு திட்டத்தை எதிர்க்கட்சிகளுடனும், பௌத்த மத குருமார்களுடனும் ஆராய்ந்து வருவதாக அறிவிக்கின்றனர். சந்திரிகா தங்களை அவமானப்படுத்தினாலும் பரவாயில்லை கிடைக்கும் பணத்துக்காகவும், வசதிகளுக்காகவும் சந்திரிகா தரும் வேலைகளை சிரமேற்று செய்து வருகின்றனர். சந்திரிகாவின் பணிப்பின் பேரிலேயே கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள், பௌத்த மத பீட குருமார்களைச் சந்தித்து சந்திரிகாவிடம் தீர்வு திட்டத்தை ஏற்றுக் கொள்ளும்படி சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஈழத்தமிழர்களே நிராகரிக்கும் தீர்வு திட்டத்தை ஏற்றுக் கொள்ளும்படி சிங்களவர்களை தமிழ் கட்சிகள் கேட்டு வருவதுதான் பச்சைத் துரோகத்தனமாகும்.

சந்திரிகா எல்லோரினது கருத்துக்களையும் கேட்டிருப்பதால் நிச்சயமாக பலவித முரண்பட்ட கருத்துக்கள் எழும். அவைகளை ஆராய்ந்து ஒரு சமரச முடிவுக்கு வருவதென்பது முடியாத விடயம் என்பது சந்திரிகா உட்பட அனைவரும் அறிந்ததே. இருப்பினும் அனைவரும் கருத்துக்களை முன் வைக்க உடன்படப் போவது அவரவர் தங்களின் சுயநல தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளத்தான். நாட்டின் அழிவு, மக்களின் துயரம் எல்லாம் இரண்டாம் பட்சம்தான். அனைவரின் அரசியல் வியாபாரம் சீராக நடைபெற வேண்டும் என்பதே அவர்களின் முதன்மையான நோக்கமாகும். கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகளின் துணையுடன், முன்னாள் சிங்களத் தலைவர்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்த கொள்கையின் வழியில் சந்திரிகாவும் இனப் பிரச்சனைக்கு தீர்வு காண முற்பட்டுக் காலத்தை ஓட்டப் போகிறார். சிங்களத் தலைவர்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.

## கொழும்பில் தமிழர்கள் அவதி



காவல் படையினரிடமிருந்து கொழும்பின் பாதுகாப்புப் பொறுப்பினை இராணுவத்திடம் ஒப்படைத்த பின் கொழும்பில் இருக்கும் தமிழர்களின் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. சிங்களவர்களின் வீடுகளில் வாடகைக்குக் குடியிருந்த தமிழர்களை காலி செய்யும்படி உரிமையாளர்கள் வற்புறுத்துகின்றனர். இதற்கு காரணம் வீடுகளில் தமிழர்களைத் தங்க அனுமதிக்க வேண்டாமென்று சிங்களவர்களை இராணுவம் அறிவுறுத்தியதுதான். ஏற்கனவே அரசு உத்தரவுப்படி சகல விடுதிகளும் மூடி விட்டதால் தங்குவதற்கு இடமின்றி தமிழ் மக்கள் பரிதவிக்கின்றனர். தெருவில் நடமாடவே தமிழ் மக்கள் பயப்படுகிறார்கள், தெருவில் காணும் தமிழர்களை விசாரணைக்கு என்று பிடித்துச் சென்று காவல் நிலையங்களில் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். பல வருடங்களாக கொழும்பில் வசிப்பவர்களுக்கும் இதே நிலைமைதான். விசாரணையின்றி பல நாட்கள் காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்படுகின்றனர். இதில் பெண்களும் விதிவிலக்கின்றி அடைத்து வைக்கப்படுகின்றனர். இது வரை கிட்டத்தட்ட 3000 பேர் வரை சந்தேகம் எனும் பெயரில் கொழும்பு காவல் நிலையங்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். புலிகளின் தொல்லையால் இந்தப் பக்கம் இருக்க முடியாமலும் தமிழ் மக்கள் போக்கிடமின்றி சொல்லொணாத் துயரத்தை அனுபவித்து வருகின்றனர். தமிழீழம் தமிழருக்குத்தான் என்றால் தமிழர்கள் ஏன் வடக்குக்குச் செல்லப் பயப்படுகின்றனர். வடக்கை விட கொழும்பில் சிங்களவர் செய்யும் சித்ரவதையே மேல் என்று எண்ணுவதால்தான் கொழும்பில் இருந்து வதைபடுகின்றனர் தமிழ் மக்கள். சிந்தித்துப் பாருங்கள் தவறு எங்கே என்று?

**ஈழ மக்களின் இதயக் குரல்**

www.padippakam.com



# அகதிகள் பக்கம்



## அகதிகளின் வாழ்வுக்கு வழிகாட்டுவது இந்தியாவின் கடமை

ஈழத் தமிழர்கள் உரிமை வேண்டி நடாத்திய நியாயமான போராட்டத்தை நசுக்குவதற்காக கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதத்தின் விளைவாகவே 1983ல் ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் அகதிகளாக இந்தியாவுக்கும் இன்னும் பல நாடுகளுக்கும் சென்றனர். 13 வருடங்கள் ஆகியும் இவர்கள் திரும்புவதற்கான சூழ்நிலை உருவாகவில்லை. இடையில் இந்திய சமாதானப்படை இலங்கை சென்றிருந்தபொழுது நாடு திரும்பிய மக்கள், இந்திய சமாதானப் படை வெளியேறியதும் பாதுகாப்பு அற்ற நிலை மீண்டும் ஏற்பட்டதால் இந்தியாவுக்கே திரும்பி விட்டனர். இனி எப்பொழுது சொந்த நாட்டுக்கு திரும்பப் போகிறார்கள் என்று நிச்சயமற்று உள்ளனர். இவர்களின் எதிர்காலம் இருள் மயமாகவே உள்ளது.

இலங்கையில் நடந்து வரும் தொடர் யுத்தத்தால் அழிவுகளுக்கு மத்தியில் வாழ வகையற்று, ஜீவாதார பொருளாதாரத்திற்கே வழியின்றி மக்கள் தவிக்கின்றனர். அங்கு இன்று நிகழும் நிகழ்வுகள் நிலைமையை இன்னும் மோசமாக்கி வருகிறது. அண்மையில் யாழ்ப்பாணம் மீது சிங்கள இராணுவம் மேற்கொண்ட ஆக்கிரமிப்பின்போது 4 மணி நேர அவகாசத்தில் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும்படி புலிகளால் மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். சொந்த உடமை எதுவும் எடுக்க வழியின்றி உடுத்திய உடைகளுடன் மக்கள் வெளியேறினர். தமிழ் மக்களின் சொத்துக்கள் சிங்கள இராணுவத்தால் சூறையாடப்பட்டும் அழிக்கப்பட்டும் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இவர்களின் எதிர்காலமும் இருள்மயமாகவே உள்ளது.

மேற்கத்திய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழர்கள் பொருளாதார ரீதியாக ஓரளவு மேம்பட்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. அதே நேரத்தில், இந்தியாவிலும், இலங்கையிலும் அகதி முகாம்களில் துன்பப்படும் மக்களை இவர்கள் கண்டு கொள்ளாமல் இருப்பது வேதனைக்குரியது. மேற்கத்திய நாடுகளிலிருந்து கோவில்களுக்கும் சுற்றுலாவுக்கும் இந்தியா வரும் ஈழத் தமிழர்கள், தங்கள் இனம் முகாம்களில் துன்பப்படுவதை அறியாதவர்கள் போல் சென்று விடுகின்றனர். துப்பாக்கி தூக்குவது மட்டும் போராட்டமாகிவிடாது, அல்லது துப்பாக்கி தூக்குபவர்களுக்கு சிறு நிதி உதவி வழங்குவதால் மட்டும் கடமை முடிந்து விட்டதாக ஆகாது. மேம்பட்டவர்கள் துன்பமுறும் தமது சொந்த மக்களுக்கு உதவ வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். எங்களுக்குள் ஒருவருக்கொருவர் உதவ முன் வராவிட்டால் வேறு யார் உதவ முன்வருவார்கள். ஈழத் தமிழினம் சொந்தக் காலில் நிற்க அனைவரும் உழைக்க வேண்டும். இக்கட்டத்தில் யூத இன மக்களை நினைவு கூர்வது அவசியமாகிறது. இஸ்ரேலுக்கு என்று ஒரு துண்டு நிலம் கூட இல்லாதிருந்த நிலையில், உலகம் முழுவதும் பரந்திருந்த யூத இன மக்கள் திட்டமிட்டு ஒன்று சேர்ந்து இஸ்ரேல் நாட்டை உருவாக்கினார்கள். இந்த யூத இன மக்களின் ஒற்றுமையான செயல்பாட்டினை முன்னுதாரணமாக கொண்டு ஈழத் தமிழர்கள் செயல்பட வேண்டும்.



இந்தியாவுக்கு வந்த ஈழத் தமிழர்களில் ஒரிசாவில் உள்ளவர்கள் அனைவரும் கூட்டுக் குடும்பம் போல் ஒன்றாக செயல்படுவதால், ஓரளவு துன்பமின்றி வாழ்கின்றனர். அத்துடன் தொழில்புரிவதற்கு ஒரிசா மாநில அரசும் உதவி செய்வதால் முன்னேற்றமான நிலையில் அம் மக்கள் வாழ்கின்றனர். ஒரிய மக்கள் உதவிக்கரம் நீட்டி அன்புடன் பழகுகிறார்கள். மொழி வேறாக இருப்பது ஒன்றே அங்குள்ள ஒரே குறைபாடாகும். ஒரிசாவில் ஈழத் தமிழ் அகதிகள் அருகில் உள்ள தரிசு நிலங்களில் விவசாயம் செய்ய அனுமதித்திருப்பது போல் தமிழகத்திலும் அவர்களது வாழ்க்கைக்கு ஊக்கம் அளித்திருக்க வேண்டும். ''ஈழதேசம்'' வாங்கிப் படிக்கக்கூட சில முகாம்களில் காவல் படையினர் தடுக்கும் நிலையில்தான் ஈழத் தமிழ் அகதிகள் வாழ்கின்றனர். அகதிகளாக இருப்பதால் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படுவது வேதனைக்குரியதாகும். ஈழத் தமிழ் அகதிகள் நாடு திரும்பும் வரை தங்களின் வாழ்வை மேம்படுத்திக் கொள்ள மத்திய, மாநில அரசுகள் அனுமதி அளிப்பதோடு, ஆரம்ப உதவிகளையும் செய்ய முன்வர வேண்டும். இதனை ஆரம்பத்தில் செய்திருந்தால் இன்று அரசு அகதிகளுக்கென்று வழங்கி வரும் நிதியுதவி அவசியமின்றிப் போயிருக்கும். மேலும் இந்த நாட்டின் வளத்தைப் பெருக்கும் சிறு பங்களிப்பும் ஈழத் தமிழர்களுக்குக் கிடைத்திருக்கும்.

இன்று ஈழத் தமிழ் அகதிகளுக்கு வழங்கப்படும் பணக் கொடுப்பனவு இலவச மின்சாரம் (பல இடங்களில் மின்சாரமே கிடையாது) போன்ற உதவிகளுக்கு ஈழத் தமிழர்கள் நன்றியுடையவர்களாவர். இந்த உதவிகள் வழங்குவதுடன் அரசின் கடமை முடிந்து விட்டதாக கருதக்கூடாது. அவர்களின் எதிர்காலம் சுபீட்சமாக அமையுவும், சுயதொழில்கள் செய்யவும் அவசியமானவற்றை வழங்க முன் வரவேண்டும். பொருளாதார ரீதியாக மட்டுமல்ல அழிந்து வரும் அவர்களின் தனித்துவமான கலை கலாச்சாரத்தை பேணிப் பாதுகாக்கவும் வளர்க்கவும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். அகதிப் பிரச்சனையால் இந்தியாவுக்கு சுமை ஏற்பட்டுள்ளதை ஈழத் தமிழர்கள் உணராமலில்லை. அந்தச் சுமையைக் குறைக்க முடியும் என்று ஈழத் தமிழர்கள் நம்புகிறார்கள். இதற்கான வழிவகைகளை செய்து தரும்படிதான் இந்தியாவைக் கேட்டுக் கொள்கிறோம்.

திபெத்திய அகதிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அந்தஸ்தை ஈழத் தமிழர்களுக்கு வழங்க மத்திய அரசு முன் வர வேண்டும். அன்று நேரு இருந்ததால் இன்று திபெத்திய அகதிகள் சொந்தக் காலில் தங்களின் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள முடிந்தது. இன்று நேரு இல்லாவிட்டாலும் அன்று அவர் உருவாக்கிக் கட்டிக்காத்த கொள்கை இன்றும் உள்ளது என்று நம்புகிறோம்.

பா. இராஜரத்தினம்

## புலிகளின் குரல்

புலிகளின் குரல் வானொலிச்செய்தியில், 12-03-96 அன்று ''வலிகாமம் பகுதியிலிருந்து இராணுவ வாகனங்கள் மூலம் வீட்டுப் பாவனைப் பொருட்களைச் சூறையாடிக் கொண்டு வந்து பலாலி இராணுவ முகாமின் ஒரு பகுதியில் களஞ்சியப் படுத்தியிருக்கிறார்கள்'' என்று இராணுவ முகாமிலிருந்து விடுதலையான பண்டத்தரிப்பைச் சேர்ந்த கதிரமலை சிவனேஸ்வரன் தெரிவித்தார்.


இவர் மேலும் தெரிவித்ததாவது 28-04-95 அன்று தனது வீட்டிற்குச் சென்றபோது அங்கு சுமார் 80க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் சூழ்ந்து கொண்டு தனது சேட்டைக் களற்றி, இரு கைகளையும் கட்டி தமது இராணுவ வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். அங்கு மூன்று நாட்களாக குடிக்கத் தண்ணீரோ, உண்பதற்கு உணவோ வழங்கப்படவில்லை. இவற்றிற்குப் பதிலாக அடியும் உதையும் தந்தனர். பின்னர் தன்னைக் கைதிகள் அடைக்கும் பகுதியில் பூட்டினர். அங்கு நேரங்காலம் பாராது கதவைத் திறந்து அடித்து உதைத்து துன்புறுத்தினர் இராணுவத்தினர், என்று சிவனேஸ்வரன் கூறினார்.

மேற்கண்ட செய்தி புலிகளின் வானொலியில் 12ம் திகதி ஒலிபரப்பப்பட்டது. சிங்கள இராணுவம் கைதிகளை அடித்து உதைப்பது மிகத் தவறான செயல், மூன்று நாட்களாக சாப்பாடு கொடுக்கவில்லை என்றும் புலிகளின் வானொலி கூறியது. மேற்கண்ட இரண்டு செயலும் தவறானவை என்று புலிகள் கண்டுள்ளனர். உண்மையில் புலிகள் திருந்தி விட்டனரா? உதைப்பது, சாப்பாடு கொடுக்காமல் விடுவது தவறான செயல் என்று வானொலியில் அறிவிக்குமளவுக்கு தார்மீகம் பற்றி அறிந்துள்ளனரா? மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. சிங்கள இராணுவம் அடித்து உதைத்து, மூன்று நாட்களுக்கு உணவு வழங்காமல் பின் உயிருடன் வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளது. சிங்கள இராணுவம் உயிருடன் தமிழனை அனுப்புகிறது.

புலிகள் என்ன செய்தனர் தமிழ் இளைஞர்களுக்கு? துண்டு, துண்டாக வெட்டி தெருக்களில் போட்டனர். காதுக்கு கட்டை சீவி இறுக்கிக் கொன்றனர். உயிருடன் டயருக்குள் போட்டு எரித்துக் கொன்றனர். உயிருடன் மண்ணுக்குள் புதைத்துக் கொன்றனர். சங்கிலியால் கட்டினால் பரவாயில்லை, வெல்டிங் வைத்து ஒட்டியுமல்லவா விட்டனர். இவர்கள் செய்துவிட்ட சித்திரவதை உலகில் யாரும் கேள்விப்பட்டிருக்க முடியாது. எத்தனை பேருக்கு இஸ்திரிப் பெட்டியை (IORN BOX) முதுகில் வைத்து தேய்த்துக் கொலை செய்திருப்பார்கள்.

தமிழ் இளைஞர்களை விதம் விதமாகச் சித்திரவதை செய்து கொல்வதை ஊக்கமூட்டி கண்டு கழித்தனர் புலிகள். ஐயாயிரத்துக்கும் (5,000) மேற்பட்டவர்களை அடித்து உதைத்து கையை வெட்டிக் காலை வெட்டி வாயினால் சொல்ல முடியாத அளவுக்கு படுமோசமான சித்திரவதைகளைச் செய்தவர்கள் இன்று வானொலியில் மூன்று நாட்கள் சாப்பாடு கொடுக்காததை செய்தியாகச் சொல்கிறார்கள்.

ஐயோ, இவர்கள் திருந்தினாலே போதும்! உண்மையில் திருந்தி விட்டனரா அல்லது தமிழ் மக்களை ஏமாற்ற இந்தச் செய்திகளைச் சொல்கிறார்களா? புலிகள் பாவ புண்ணியத்தைக் கண்டு கொண்டால் தமிழ் மக்களுக்கு விடிவு உண்டு.



வெறும் நவீன ஆயுதங்களாலும், தெளிவற்ற போராளிகளினாலும் ஈழத்தை வென்றுவிட முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழரால் அனாதைகளாக்கப்பட்ட தமிழர்கள்



சகோதரி தவமலர், உங்கள் இழப்பையும் வேதனையையும் ஈழத் தமிழர்கள் புரிந்து கொள்ளும்படி எழுதியுள்ளீர்கள். இது போன்ற இழப்பு எங்களில் யாருக்கும் ஏற்படக்கூடாது என்றுதான் நாங்களும் வேண்டுகின்றோம். இதனைப் போன்று மோசமான சம்பவங்கள் ஈழ விடுதலையின் பெயரால் இடம் பெற்றுள்ளன! உங்கள் வேதனையில் நாங்களும் பங்கு கொள்கின்றோம். எங்கள் இனம் திருந்த வேண்டும் என்பதினால் உங்கள் கடிதத்தினை முன்னுரிமை கொடுத்து பிரசுரிக்கின்றோம். தலைப்பு மட்டும் ஆசிரியருடையது.

ஆசிரியர்.

ஐயா,

எனது பெயர் தவமலர் . சொந்த ஊர் ஆனைக்கோட்டை. அகதியாக சேலம் பவானி அருகில் இருக்கும் முகாமில் இருக்கிறேன். எனக்கு அம்மா மட்டுமே இருக்கிறார். அப்பா 1979ல் இறந்து விட்டார். முகாமில் எனது தாயாருடன்தான் இருக்கிறேன். என் உடன் பிறந்த சகோதரர்கள் நான்கு பேர். 1983ம் ஆண்டு எனது மூத்த சகோதரன் புளொட் இயக்கத்தில் சேர்ந்தார். எனது இரண்டாவது சகோதரன் 1984ம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் சேர்ந்தார். 1985ம் ஆண்டு எனது இளைய சகோதரர்கள் இரண்டு பேரும் ஈ.பி.ஆர்.எல்.எப் (EPRLF) இயக்கத்தில் சேர்ந்து விட்டனர். நானும் அம்மாவும்தான் தனித்திருக்கிறோம்.

இன்னும் ஒன்று இரண்டு வருடங்களில் தனி நாடு கிடைத்துவிடும் அதுவரைக்கும்தானே நானும் அம்மாவும் தனித்திருக்க வேண்டும். பின்னர் சகோதரர்கள் வீடு திரும்பி விடுவார்கள் என்ற நம்பிக்கையில் நாங்கள் தனிமையைப் பற்றிக் கவலைப்பட்டதே இல்லை. பலாலி இராணுவ முகாமிலிருந்து, இராணுவம் வெளியே வர முடியாத அளவு இயக்கங்கள் எல்லாம் ஆளுக்கு ஒரு பகுதியில் நின்று பாதுகாக்கின்றனர். யாழ்ப்பாணக் கோட்டையிலும் அதே போன்று நிற்கின்றனர். காரை நகர், ஆனையிறவு எல்லாவற்றையும் சுற்றி இளைஞர்கள் நின்று பாதுகாக்கின்றனர் என்பதால் நாடு வெகு விரைவில் கிடைத்துவிடும் என்று நானும், அம்மாவும் நித்திரை கொள்ளப் போகும் போது கதைத்துக் கொள்வோம். நான் சாகிறதிற்கு முன்னால் பிள்ளைகள் தனிநாடு பிடித்து விடுவார்கள் என்று என்னிடம் அம்மா அடிக்கடி கூறுவார்.

1986ம் ஆண்டு சித்திரை அல்லது வைகாசி என்று நினைக்கிறேன் டெலோ (TELO) இயக்கத்தை புலிகள் இயக்கம் அடிப்பதாக அம்மாவிடம் யாரோ வந்து சொன்னார்கள். நிறைய டெலோ உறுப்பினர்களைக் கொன்று விட்டதாகவும், டெலோ இயக்கத்தில் இப்போது யாருமே இல்லையென்றும் சில நாள் கழித்துச் சொன்னார்கள். இவை நடந்த ஒரு கிழமை கழித்து எனது சின்னண்ணன் வீட்டிற்கு வந்தார். அம்மா அவரைக் கட்டிப் பிடித்து அழுதார்கள். உனக்கு ஒன்றும் நடந்துவிடக்கூடாது என்று ஒவ்வொரு நாளும் கடவுளை வேண்டிக் கொண்டேன். கடவுள் உன்னைக் காப்பாற்றுவார் என்று தனக்குள்ளாகச் சொல்லி அழுது கொண்டா அம்மா.



சிறிது நேரம் சென்ற பின் ஏன் தம்பி அந்த டெலோ பொடியன்களை இப்படி உங்கள் இயக்கம் கொலை செய்கிறது. அதுகளும் விடுதலைக்காகத்தானே போராடினதுகள் என்று அம்மா கேட்டா. சென்னையிலிருந்து தலைவர் அறிவித்துள்ளாராம். அதனால் ஏதாவது இருக்கும். கிட்டருக்கும் கூட அவ்வளவு விருப்பமில்லை எண்டுதான் மற்றவையள் சொல்லிச்சினம். இதுக்கு மேல கேளாதேங்கோ என்று சொல்லிவிட்டு இரவு சாப்பிட்டு விட்டு போய் விட்டார்.

டெலோ இயக்க இளைஞர்களை சுட்டு, வெட்டி, டயர் போட்டு எரித்து தண்ணிக்குள் போட்டு அமுக்கி இப்படியெல்லாம் கொலை செய்தனர் என்று ஊரில் இருப்பவர்கள் சொன்னார்கள். சிங்கள இராணுவம் சுட்டுக் கொன்றால் எதிரி சுட்டுக் கொன்றுவிட்டான் என்று நினைக்கலாம். இது என்ன ஒரே இனத்துக்குள்ளே இப்படி கொலை செய்கின்றனர். விடுதலைப் போராட்டமா? அல்லது பங்குச் சண்டையா? என்று எனக்குப் புரியவில்லை எங்கட ஊர்ச் சனமும் சிலதுகள் சரி என்று சொல்லுதுகள், சிலதுகள் பிழை என்று சொல்லுதுகள். சரி பிழை எனக்கும் தெரிந்திருக்கவில்லை.

இவைகள் நடந்த ஓர் நான்கு மாதங்கள் என்று நினைக்கிறேன். புளொட் இயக்கத்தை தடை செய்து விட்டதாகவும், அதிலும் நிறையப் பேரை பிடித்துக் கொன்று விட்டதாகவும் ஓடி வந்த ஊரார் சிலர் கூறினர். எனது மூத்த அண்ணன் என்றால் - எனது அம்மாவுக்கு உயிர். தலையில் அடித்துக் கொண்டு கத்தத் தொடங்கி விட்டா அம்மா. அப்படி ஒன்றும் நடக்காது, சின்ன அண்ணன் புலிகள் இயக்கத்தில் இருக்கிறார். நீங்கள் அழ வேண்டாம் என்று அம்மாவுக்கு ஆறுதல் கூறினேன். பெரியண்ணன் ஒரு பாவி. படிக்கிற நாட்களிலிருந்தே விடுதலை வேணும், பாட்டாளி விடுதலை, தொழிலாளி விடுதலை என்று சொல்லுவார், விழுந்தடித்துக் கொண்டு ஊரில இருக்கிற எல்லாருக்கும் உதவிகள் செய்வார். புளோட் பொடியன்களுக்கென்று வீட்டிலிருந்து சாப்பாடு கட்டிக் கொண்டு போவார். அம்மாட்ட இருக்கிற காசையும் வாங்கிக் கொண்டு போவார். நாங்கள் காசு கேட்டால் அம்மா பேசுவா. பெரியண்ணன் கேட்டால் யாருக்கும் தெரியாமல் உடனே கொடுத்து விடுவா. என் மேல் பெரியண்ணனுக்கு உயிர். எங்காவது வெளியில் செல்வதென்றால் என்னைக் கூப்பிட்டுத்தான் சொல்லிப் போட்டு போவார். டெலோ இயக்கத்தை அடித்துக் கொலை செய்த பின்னர், பெரியண்ணன் வீட்ட வாறதைக் குறைத்துக் கொண்டார். அம்மாவை நான் சமாதானப்படுத்தினாலும் எனக்குள் ஓர் பயம் இருந்து கொண்டே இருந்தது. புளொட் இயக்கத்துக்கு மெண்டிஸ் என்று யாழ்ப்பாணத்தில் பொறுப்பா இருந்தவரைக் கேட்டால் தெரியும் என்று, அவையளின்ர ஆதரவு அண்ணன் ஒருவர் சொன்னார். நானும் அம்மாவும் யாழ்ப்பாணம் டவுணுக்குப் போனோம். எங்கு பார்த்தாலும் பொடியன்கள் துவக்கோட திரியினம். யாரிடத்திலும் எதுவும் பேச முடியவில்லை. சில தெரிஞ்ச இடங்களுக்குப் போனா அவர்கள் இதுகளை எல்லாம் கேக்காதேயுங்கோ என்று பதில் கூற மறுத்து விட்டனர். மெண்டிஸ் என்ற பொறுப்பாளரையும் புலிகள் இயக்கம் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள் என்று பெரிய கடை பஸ் ஸ்டாண்டில் நின்ற ஆட்கள் பேசிக் கொண்டார்கள். இனி அங்கு அலைவதில் பிரியோசனம் இல்லை. ஆதலால் நாங்கள் நேராக புலிகள் அலுவலகத்துக்குப் போனோம். சின்ன அண்ணரின் பெயரைச் சொல்லி சந்திக்க வேண்டும் என்று கேட்டோம். அவர் சாவகச்சேரியில் நிற்கிறார். வெள்ளிக்கிழமைதான் வருவார். நாச்சிமார் கோவிலடியில் அவரைச் சந்திக்கலாம் என்று மட்டும் கூறினர்.

பெரியண்ணனிடமிருந்து ஒரு தகவலுமே இல்லை. ஐந்து நாட்கள் கழித்து, அம்மாவும், நானும் நாச்சிமார் கோவிலடிக்குச் சென்றோம். மாலை 5 மணியளவில் சின்னண்ணன் வந்தார். அவரைப் பார்த்ததும் அம்மா அழத் தொடங்கி விட்டா. அழ வேண்டாம் எனக் கூறி அந்த முகாமின் ஓர் மூலைக்கு அழைத்துச் சென்றார். நடந்து முடிந்து விட்டது. இனி அழுது ஒன்றுமாகப் போவதில்லை என்று கூறி முடிப்பதற்குள் அம்மா நிலத்தில் விழுந்து கதறத் தொடங்கி விட்டா. பெரியண்ணன் எங்கே என்று கேட்டு அவரது கையைப் பிடித்துக் கொண்டு நானும் அழுதேன். அவர் பதில் ஏதும் கூறவில்லை. தலையைக் குனிந்து கொண்டு நீங்கள் போயிற்று வாங்கோ என்றுார். சரி பரவாயில்லை அவருடைய பிரேதத்தையாவது உங்கட ஆட்களிடம் சொல்லி எடுத்துத் தாருங்கோ அண்ணா என்றேன். நடந்து 10 நாளாகப் போச்சு என்று மீண்டும் பதில் சொன்னார். அம்மா அழுது புரண்டு எழுந்து இனிப் போதும். விடுதலை வேண்டாம் நீ வந்து விடு வீட்டுக்கு என்று அண்ணனை கையைப் பிடித்துக் கொண்டு றோட்டு வரை இழுத்து வந்து விட்டா. ஆனால் அண்ணன் முடியாது நீங்கள் போங்கோ என்று கூறிவிட்டு முகாமிற்குள் சென்று விட்டார்.

அம்மாவும் நானும் அழுது கொண்டே வீட்டுக்குச் சென்றோம். 45வது நாள் பெரியண்ணனுக்கான சடங்குகள் செய்தோம். அந்த சடங்குக்கு புளொட் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் வந்தார். ஆறுதல் கூறிவிட்டுச் செல்லும் போது, பெரியண்ணனைக் கொல்ல வந்த ஐந்து பேரில் சின்னண்ணனும் ஒருவர் என்று கூறியதும் அம்மா மயங்கி விழுந்துட்டா! அங்கு நின்ற சிலரும் உண்மைதான் என்று ஆமோதித்தனர். என்ன கொடுமை? என்ன விடுதலைப் போர்? யாரைக் கொல்லுகிறார்கள்? பைத்தியக்கார விடுதலையாக அல்லவா தெரிகிறது! மிருகங்கள் அல்லவா பகுத்தறிய முடியாதவை! அப்படி என்ன துரோகம் காணப்பட்டது. பெரியண்ணனிடம் சிங்களச் சிப்பாய்களுடன் கூட்டு வைத்திருந்தாரா? யாரையாவது காட்டிக் கொடுத்தாரா? ஒன்றுமே இல்லையே! நாடு கிடைத்ததுக்குப் பிறகென்றால் பதவி ஆசை எனலாம். இப்பவே இப்படி என்றால் போகப் போக என்னவாகும் என்று அப்போவே நினைத்தேன்.

எஞ்சியிருக்கும் இரு தம்பிகளையென்றாலும் எப்படியாவது ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்திடமிருந்து விலத்தி வீட்டுக்கு அழைத்து வந்து விட வேண்டும் என்று தீர்மானித்தேன். பெரியண்ணனது இழப்பை அம்மாவால் தாங்க முடியவில்லை. சின்னண்ணனை, இனி பார்க்கவே கூடாது. தம்பிகளை அழைத்துக் கொண்டு எங்காவது போவோம், போய் கூட்டிக் கொண்டு வா என்று கூறினா.

தம்பிகளைத் தேடி இரண்டு மாதங்கள் அலைந்தேன். திடீர் என செய்தி வந்தது. ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தைப் புலிகள் தடை செய்து விட்டனராம். பலரைச் சுட்டுக் கொன்று விட்டனராம். கன பேரைக் கைது செய்து கொண்டு சென்றுள்ளனராம் என்று.

அழுது குளறிக் கொண்டு அம்மாவும் நானும் ஓடினோம். பிந்தினால் பெரியண்ணன் போன்று, தம்பிகளுக்கும் ஏற்பட்டுவிடும் என்ற பயத்தினால் ஓட்டமும் நடையுமாக யாழ்ப்பாணம் டவுணுக்குச் சென்றோம். கிட்டு இருக்கும் முதலாம் குறுக்குத் தெரு அலுவலகத்தைத் தேடிக் கண்டுப்பிடித்தோம். கிட்டுவையோ அல்லது பொறுப்பு வாய்ந்த யாரையாவது சந்திக்க வேண்டும் என்று கேட்டோம். என்ன அலுவலாக சந்திக்க வேண்டும் என்று கேட்டனர். தம்பிகள் இருவர் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தில் இருந்தவர்கள். அவர்கள் பற்றிக் கேட்க வேண்டும் என்று சொன்னோம்.

7 ஆம் பக்கம் பார்க்க

சர்வாதிகாரம் எப்பொழுதும் யுத்தத்தையே நேசித்து அமைதியைப் புறக்கணிக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழர் கண்ட சிங்களச் செல்வங்கள்!



நீலன் திருச்செல்வம்

தமிழரசுக் கட்சிக்கும், பின் நாளில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமாக இரண்டு திருச்செல்வங்கள் நிரந்தரத் தரகர்களாயிருந்தனர். கறுவாத் தோட்டத்து வாசிகளான இவர்களில் முன்னையவர் ஓரளவு தந்தை செல்வநாயகத்தின் தலைமைக்குக் கட்டுப்பட்டவர் முருகேசு. திருச்செல்வம் என்ற தமிழ்ப் பெயர் இருந்தாலும், தமிழ் வாடையே படாமல் வாழ்ந்தவர் அவர்.

தமிழரசுக் கட்சி, யு.என்.பி, ஆட்சியாளருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாவட்டங்கள் தோறும் சபைகள் அமைத்து தமிழர்களுக்கும் நிர்வாகத்தில் பங்கு கொடுப்பதாக உறுதியளிக்கப்பட்டதன் அடிப்படையில் 1965ல் உள்ளூராட்சி அமைச்சர் பதவி தமிழரசுக் கட்சிக்கு வழங்கப்பட்டது. அமைச்சர் பதவிகளை ஏற்றுக் கொள்வதில்லை என்ற கொள்கை தமிழரசுக் கட்சிக்கு இருந்ததினால் வெளிநபர் ஒருவரை அமைச்சராக்குவது என்று தீர்மானித்து மந்திரியாக்கப்பட்டவர்தான் நீலன் திருச்செல்வத்தின் அப்பாவான முருகேசு திருச்செல்வம். இருந்தபோதிலும், அனுராதபுரத்தை புனித நகரமாக்கிய சிங்கள அரசு திருகோணமலையை இந்துக்களின் புனித நகரமாக்கும்படி கேட்டுக் கொண்டதை ஏற்க மறுத்ததினால் பதவியை விட்டு விலகும்படி, தமிழரசுக் கட்சி உத்தரவிட்டதும், முருகேசு திருச்செல்வம் உடனே பதவியை ராஜினாமா செய்தார்.



தேவானந்தே

## பகிரங்க துரோகம்

இன்று பாருங்கள் உயிரைப் பணயம் வைத்துக்கூட எம்.பி பதவிகளை பிடித்துக் கொண்டு எவ்விதமெல்லாம் தொங்குகிறார்கள் என்று. உதாரணத்திற்கு டக்ளஸ் தேவானந்தேயைப் பாருங்கள். அரசு ஆதரவுடன் பிழைப்பு நடத்தும் இவர் இடையிடையே தமிழர் பற்றிப் பேசுவதும், அரசுக்கு ஆதரவாக வாக்கு அளிக்கும்போது நிபந்தனைகள் வைப்பதும் சந்திரிகாவுக்குப் பிடிக்கவில்லை. S.T.F சிப்பாய்களை அனுப்பி அவர் தங்கி இருந்த வீட்டில் காவலுக்கு நின்ற இவரது நபர்கள் இருவரைச் சுட்டுத் தள்ளினார். இவரையும் விரட்டி விரட்டிச் சுட்டனர். இவர் தலைதெறிக்க, ஜன்னல் வழியாகக் குதித்து துண்டுமின்றி துணியுமின்றி ஓடித்தப்பியதாக பத்திரிகைகளுக்கு அறிக்கை வேறு கொடுத்திருந்தார். அரசப் படைகள்தான் சுட்டனர் என்று இவருக்கும், இவரது ஆட்களுக்கும் நன்கு தெரியும். தெரிந்தும் புலிகள்தான் சுட்டனர் என்று அப்பட்டமாகப் பொய் கூறினார் தேவானந்தே.

இலண்டனிலிருக்கும் இவரது தோழர் ஒருவர் அனுதாபம் தெரிவித்து விட்டு, அரசாங்கம் செய்த இந்தக் கொலைகளை ஏன் புலிகள் செய்தனர் என்று கூறுகிறீர்கள்? என்று கேட்டதற்கு, அரசாங்கம் செய்தது என்று கூறினால் எனக்கு இருக்கும் சலுகைகள் அனைத்தையும் நிறுத்தி விடுவார் சந்திரிகா என்றதுடன், புலிகள் குறி வைத்தும் தப்பிய ஓர் தலைவன் இருக்கிறான் என்றால் அது நானேதான் என்ற பெருமை வேறு எனக்குக் கிடைக்குமல்லவா என்று திருப்பிக் கேட்ட தேவானந்தே புலிகள் மீது பழியைப் போட்டு பிழைப்பு நடத்தும் கேவலத்தைப் பார்த்தீர்களா? சிலவேளை சந்திரிகாவாக முன்வந்து தனது ஆட்கள்தான் சுட்டனர் என்று சொன்னாலும் தேவானந்தே சம்மதிக்க மாட்டார். அந்த அளவுக்கு பணத்தையும் பதவிகளையும் சந்திரிகா மூலம் சம்பாதித்துள்ளனர் இவர்கள்.



பிரேமதாசா

இவர்கள் எல்லாம் வெளிப்படையாகத் துரோகம் செய்பவர்கள். ஆனால் எங்கள் கறுவாத் தோட்டத்து நீலன் திருச்செல்வம் வெளிப்படையாக எந்தத் துரோகமும் தமிழ் மக்களுக்குச் செய்யமாட்டார். அவரது துரோகம் எல்லாம் அரசியல் திருத்தங்களிலும், அரசியல் யாப்புகளிலும்தான் இருக்கும். ஜெயவர்த்தனே, பிரேமதாசா, சந்திரிகா என்று நிரந்தரமான தமிழ்ப் பெயர் உள்ள சிங்களத் தரகர் இவர்தான். அண்மையில் சந்திரிகா தயாரித்து சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டத்திலும் இவரது பங்கு மிக அதிகமாக உண்டு. பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி இதுபற்றிப் பேச சந்திரிகாவைச் சந்திக்கச் சென்றால் நீலன் அந்தக் குழுவிலும் இருக்கிறார். அங்கும் இருப்பார், இங்கும் இருப்பார். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இது பற்றித் தெரியாது! பாவம் அவர்கள் என்றும் சொல்ல முடியாது. அவர்களுக்கும் நன்கு தெரியும் நீலன் திருச்செல்வம்தான் அங்கும் இருந்து திருத்தங்கள் செய்தவர் என்று. என்ன செய்வது. தமிழரிலிருந்து விடுபட்ட கூட்டணி என்பதால் நிரந்தரமாக சிங்களவருக்கும் கூட்டணிக்கும் ஓர் தரகர் தேவை. நீலன் சிங்கள ஆட்சியாளரின் பிரதான கதவையும் சமையல் அறைக் கதவையும் தட்டும் தகுதி படைத்தவர் என்பதால் அவசரத்திற்கு அவரது உதவி கூட்டணிக்குத் தேவைப்படும் என்று சரியான கணிப்பு அவர்களிடத்தில் இருக்கிறது. ஏற்கெனவே எம்.பி பதவியை லஞ்சமாகக் கொடுத்து அவரது தரகுத் தொழிலுக்கு உரமேற்றியுள்ளனர். ஏனென்றால் கூட்டணியே அடிக்கடி குழம்பும், தலைவர் சிவசிதம்பரத்தை தொலைபேசி மூலமாக B.B.C போன்ற வானொலிகள் தொடர்பு



ஜெய வர்த்தனே,



சிவசிதம்பரம்

கொண்டால், சிங்கள இராணுவமா? முன்னர் போன்று இல்லை. இப்ப நல்ல மரியாதையாய் பழகினம். முறைப்பாடு ஒன்றும் தெரியவில்லை என்றும் தீர்வுத் திட்டமும் நல்லதாகத்தான் தெரியுது என்றும் ஊர் உலக நடப்புகள் தெரியாமல் எதையாவது சொல்லி வைக்க, தங்கத்துரை, யோசப் போன்றோர் என்ன இந்தக் கீரையாருக்கு வந்தது. சும்மா வாயை வச்சுக் கொண்டு இருக்கலாம் தானே என்று மறைவில் நின்று திட்டித் தீர்ப்பார்கள்.

## தெளியாத குழப்பங்கள்

தங்கத்துரை வாயைத் திறந்தால் சம்பந்தனுக்கு பத்திக் கொண்டு வரும். வாழ்நாளில் நான் ஏமாந்தது என்றால் இந்தத் தங்கத் துரையிடம்தான் என்று தன் நண்பர்களுக்கு தெரிவித்துக் கொள்வதுடன் எம்.பி பதவி எனக்குப் பெரிசல்ல. ஆனால் இவனுக்கு ஒரு பாடம் படிப்பிக்காமல் நான் சாகப் போவதில்லை என்று உறுதிமொழி எடுத்துக் கொள்வார் சம்பந்தன். காவ் லொக் வீட்டிலிருந்து தனியே வெளியில் செல்ல முடியாத இந்த எம்.பி பதவியினால் இவர்களுக்குள் ஏற்பட்டுவிட்டது இந்தத் தீராத பகை. தமிழருக்கான விடுதலைக் கூட்டணிதான் இது என்று சொல்ல எவ்வளவு வெட்கமாக இருக்கிறது. என்னதான் இருந்தாலும் இவர்கள் எல்லோருக்கும் நீலன் மீது மிகுந்த பயபக்தி உண்டு. ஏனென்றால் அவர் அரசாங்கத்தின் ஆதிக்கத்தைப் பக்கபலமாகக் கொண்டவர் என்பதினால் ஜனாதிபதியுடன் எவ்வளவு மரியாதை கொடுத்துத் தள்ளி நின்று பேசுவார்களோ, அதே பாணிதான் இவரிடத்திலும்.

இலக்சுமணன் கதிர்காமரை அமைச்சராக்குவதற்கு சந்திரிகா தயக்கம் காட்டினார். நீலனது சிபாரிசு மிகவும் உறுதியானதாக இருந்ததினால் சந்திரிகாவால் அசர முடியவில்லை. நாளைக்கு தனக்குப் பக்கபலமாகத் தமிழரைக் கவிழ்க்க துணை நிற்பவர் கூறுகிறாரே என்று லச்சுமணனையே மந்திரியாகத் தீர்மானித்தார். தமிழருக்கென இருந்த தபால் மந்திரிப் பதவியை கொடுக்கும்படி சிறிமா தனது அனுபவத்தைக் கொண்டு சொன்னார். சந்திரிகாவும் இவர்களுக்கு முத்திரை குத்த நாக்கு நீட்டும் தொழில்தான் சரி என்று தீர்மானித்த வேளை மீண்டும் நுழைந்தார் நீலன் திருச்செல்வம், இலச்சுமணரை வெளிவிவகார மந்திரியாக்கினால் நிறையவே பலன் கிடைக்கும் என்பதை விலாவாரியாக எடுத்துச் சொன்னார் சந்திரிகாவுக்கு.

சுதந்திரம் பெற்ற இத்தனை ஆண்டுகளிலும் வெளிவிவகார அமைச்சு இயங்கித்தான் வருகிறது. தமிழ்ப் பெயர் கொண்ட ஒருவரை நியமிப்பது இதுவே முதல்தடவை. தமிழரை இழிவுபடுத்த வென்றே இந்த வில்லனைத் தெரிவு செய்து ஆலோசனை வழங்கியது நீலகண்டனின் நரிமூளை. தமிழர் விடுதலை கேட்கின்றனர். அவர்களில் ஒருவர் உலகம் சுற்றி அது தேவையில்லை. வெறும் பயங்கரவாதம்தான் நடக்கிறது என்று கௌரவமான பதவியிலிருந்து கூறினால் தமிழர் போராட்டம் பின்னடைய வாய்ப்பு உண்டு என்று விளங்க வைத்துத்தான் இலக்சுமணன் மந்திரியாக்கப்பட்டார்.

இப்படி மந்திரியாக்கப்பட்டதற்கு ஓர் கதையையும் புனைந்து விட்டார் நீலவண்ணன். சிறிமாவோவை J.V.Pக்காரர் 1971ல் விரட்டித் திரிந்த வேளை கடற்படையில் பணிபுரிந்த இலச்சுமணனின் அண்ணனான ராஜன் கதிர்காமர் தான் சிறிமாவோவைப் பாதுகாத்து கப்பலில் வைத்திருந்தார். ஆதலால் அந்த நன்றிக் கடனுக்காக அந்தக் குடும்பத்தில் ஒருவரை சிறிமா மந்திரி பதவி கொடுத்து கௌரவித்துள்ளார் என்ற செய்தியைக் கேட்பவர்கள் யாரும் நம்பாமல் இருக்க முடியாது. இராஜன் கதிர்காமர் கடற்படையில் இருந்ததும் உண்மை சிறிமாவோவுக்கு காவல் நின்றதும் உண்மை. ஆனால் இந்த நன்றிக்கடன், கௌரவம் எல்லாம் பண்டார நாயக்கா பரம்பரையில் கிடையாத ஒன்று. நீலன் போன்றோரால் திரித்து விடப்பட்ட கயிறுதான் சிறிமாவோவின் கதை. இப்படியாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி போர்வையில் தமிழ் இனத்துக்குச் செய்து வரும் துரோகங்கள் மன்னிக்க முடியாதவை.

## அரசியல் தரகர்கள்

யார் பதவிக்கு வந்தாலும் இந்தச் சிங்களச் செல்வத்துக்கு தனி மரியாதை.



கதிர்காமர்

தமிழர் விடு(பட்ட)தலைக் கூட்டணியும் இது பற்றிச் சிந்திப்பதில்லை. தொலுக்கு முதலியை ஏன் பகைத்துக் கொள்ளுவான் என்ற தரகு மூளைதான் அவர்களுக்கும். ஏனெனில் அவர்கள் (கூட்டணியினர்) அனைவருமே அப்புக் காத்துகள். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும், நீதிபதிக்குமிடையில் நின்று உண்மையை பொய் என்றும் பொய்யை உண்மை என்றும் குழப்பி விடுவதுதான் இவர்கள் தொழில். நீதி வழங்கும் பொறுப்பு நீதிபதியிடம்தான் உண்டு. அதனால் இரண்டு பேருக்குமிடையில் இருந்து குழப்பும் தரகுத் தொழில்தான் அப்புக்காத்துத் தொழில். தரகர்களை நாகரீகமாக அட்வகேட் என்று ஆங்கிலேயர் அழைத்தனர். எனவேதான் கூட்டணியும் குழப்பி, தமிழர்களையும் குழப்பி, சிங்களவர் வெற்றிக்கு வழி காண்பிக்கின்றனர். இதனால் பணம் பயன் பெறுவது திருவாளர் செல்வங்கள் தான். அழிவைக் காணுவது எங்கள் தமிழ் இனம்.

சிங்கள ஆட்சியாளரால் உருவாக்கப்பட்ட தமிழ்த் துரோகத் தலைவர்கள் செய்யும் துரோகங்களுக்கும் கூட்டணி செய்யும் துரோகங்களுக்கும் வேறுபாடு பெரிய அளவில் இல்லை. அவர்கள் ஆயுதங்களைக் கையில் எடுத்துக் கொண்டு துரோகம் செய்கின்றனர். இவர்கள் அதனைத் தொட்டுக் கூடப் பார்க்காமல் துரோகம் செய்கின்றனர். அவர்கள் தலைகளை எண்ணி அதற்குச் சிங்கள



படிப்பகம்

www.padippakam.com





சிறிமாவோ பண்டார நாயக்கா

அரசிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு துரோகம் செய்கின்றனர். இவர்கள் எம்.பிக்களுக்கு மட்டும் பணம் பெற்றுக் கொண்டு துரோகம் செய்கின்றனர். இவர்கள் அனைவரும் தமிழர் கண்ட சிங்களச் செல்வங்களா வார்கள்.

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் இவர்கள் கலந்து கொண்டுள்ள னரா என்று பார்த்தால் கறுவாத் தோட் டத்திற்குத்தான் வெளிச்சம். சரி விடுங் கள். ஏதாவது சேவை, தொண்டு இதை யாவது செய்திருக்கிறார்களா என்று பாருங்கள். பதவிகளுடனும், பணத்துட னும்தான் விளையாடியுள்ளனர். செல்வ நாயகம் அமிர்தலிங்கத்துடன் அவை முடிந்து போன கதைதான். சிங்கள ஆட் சியாளர்கள்தான் இன்றைய செல்வங்க ளின் வழி காட்டிகள். தமிழர்களென இவர்களைக் காண்பது தவறு.

# கேளுங்கள்



**கேள்வி:** நான் ஒரு இந்தியத் தமிழன். தமிழ் நாட்டிலிருந்து பிழைப்பு தேடி இலங்கைச் சென்றன் தமிழன் தனி நாடு கேட்பது நியாயம் தானா?

குமார்
போரூர்,
சென்னை.

**பதில்:** 1796ல் இலங்கை தீவை பிரிட்டிசார் கைப்பற்றினர். 1801 வரை இந்தியாவில் இருந்து செயல்பட்ட கிழக் கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின் கீழ் இருந்தது. 1802ல் பிரிட்டிசாரின் முடிக்கு ரிய ஆதிக்க நாடாகி பிரிட்டிசாரின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது. அதன் பின் மலையகத்தில் (இலங்கையின் மத் திய மாகாணம்) தேயிலை தோட்டங்க ளில் வேலை செய்வதற்காக தமிழகத்தி லிருந்து தமிழர்களை பிரிட்டிசார் அழைத்துச் சென்றனர். இன்று வரை இவர்கள் அங்கு வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் இலட்சக்கணக்கானோர் இன்னும் குடியுரிமை கிடைக்கப் பெறா மல் நாடற்றவர்களாக உள்ளனர். இலங் கையில் வாழ விரும்பும் இவர்கள் அனைவருக்கும் குடியுரிமை வழங்கப் பட வேண்டும் என்பதே எமது கொள் கையாகும். குமார் நீங்கள் குறிப்பிடுவது இவர்களைத்தான். வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்கள்தான் இலங் கையின் பூர்வகுடிகள். வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் கணிப்பின்படி இந்தியத் துணைக் கண்டத்தின் இமய மலை தொடக்கம் தெற்கு இலங்கை வரை திராவிடர்களே வாழ்ந்தனர் என்ப தாகும்.

கி.மு. 500 ஆண்டு வட இந்தியாவி லிருந்து துர்நடத்தைகள் காரணமாக தந் தையால் நாடு கடத்தப்பட்டவன்தான் இளவரசன் விசயன். சிங்கள இனத்தின் முன்னோடியாக கருதப்படும் விசயன். தன் 700 ஆதரவாளர்களுடன் இலங்கை தீவின் கரையோரம் காலடி எடுத்து வைக்கும்பொழுது தமிழர்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருந்தனர். விசயன் இலங்கைக்கு வருகை தரும் முன்னரே தமிழர் இலங்கையின் நிலப்பரப்பெங் கும் வாழ்ந்தனர். இலிங்க வழிபாட்டின ரான ஈழத் தமிழர்கள் முன்னேசுவரம், திருக்கேதீச்சரம், திருகோணமலைச்ச ரம், மாமாங்கேசுவரம் போன்ற சில ஆலயங்களும், மாணிக்க கங்கைக் கரை யில் முருகன் கோயிலும் அமைத்து தமது பண்பாட்டுச் சின்னங்களை பதித்திருந்த னர். விசயன் தலைமையிலான சிங்கள வர்கள் இலங்கைத் தீவுக்கு வரும் முன் னரே தமிழர்கள் வாழ்ந்ததற்கான சான்று களை சிங்கள வரலாற்று நூலான மகா வமிசமே உறுதி செய்கிறது. (இதனால் மகாவம்சம் உண்மை கூறும் நூல் என்று பொருள்படாது) மேலும் இந்தியாவின் இதிகாச நூலான இராமாயணத்தில் இடம் பெறும் இலங்கை வேந்தனான இராவணன் தமிழனே. இந்தியாவிலி ருந்துதான் தமிழன் இலங்கைக்கு சென் றான் என்பதற்கான வரலாற்றுச் சான்று கள் எதுவுமில்லை. இரு பகுதியிலும் படை எடுப்புகள் நடந்துள்ளன. இதுவே உண்மை.

பிரிட்டிசாரின் ஆட்சி நிர்வாக வச திக்காக ஒன்றிணைக்கும் வரை தமிழர்க ளுக்கும், சிங்களவர்களுக்கும் சுயாதிக் கம் கொண்ட இரு நாடுகள் அத்தீவில் இருந்தது என்பதே உண்மை நிலையா கும்.

சிங்களவர்கள்தான் இலங்கையில் குடியேறியவர்களாவர். 1948ல் சுதந்திரத் துக்குப் பின் ஜனநாயக அடிப்படையில் பெரும்பான்மை சிங்களவர்களிடம் ஆட்சி அதிகாரம் சென்று அடைந்ததால் தமிழர்களின் பாரம்பரிய நிலம் பறிக்கப் பட்டு இரண்டாந்தர குடிமக்களாக்கப் பட்டு விட்டனர். ஈழத் தமிழர்கள் பிழைப்புக்காக இலங்கை சென்றவர்கள் அல்ல. அந்நாட்டின் பூர்வகுடிகள் தமி ழர்களே. இழந்த எங்கள் பிரதேசத்தை யும் சுதந்திரத்தையும் மீட்பதற்காகவே இன்று போராடி வருகின்றனர். எங்க ளது (ஈழத்தமிழரது) பிரச்சினையையும் மலையகத்தில் வாழும் தமிழர்களது பிரச்சினையையும் ஒன்றுபடுத்திப் பேசாதீர்கள் தமிழ்நாட்டிலிருக்கும் பல தலைவர்களுக்கே இதுபற்றித் தெளி வாக தெரியாது. ஆதனால் நீங்கள் கேட் டதும் நியாயமானதே.

**கேள்வி:** ENDLF இந்தியாவை ஏன் நம்பியிருக்க வேண்டும்?

செல்வம்
அகதிகள் முகாம்,
மதுரை.

**பதில்:** தமிழீப் போராட்டத்தை வென் றெடுப்பதற்கு நாம் ஈழத் தமிழ் மக்க ளையே முழுமையாக நம்பி இருக்கின் றோம். மேலும் எமது விடுதலையை நாம்தான் போராடிப் பெற வேண்டும். அதற்கான தார்மீக ஆதரவைத்தான் இந் தியாவிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். அதிலும் குறிப்பாக தமிழக மக்களின் ஆதரவு இன்றியமையாதது. தமிழக மக் களும் ஈழத் தமிழர்களும் வெவ்வேறு தேசத்தை சார்ந்தவர்களாயினும் மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற் றில் ஒன்றுபட்டவர்கள். கடந்த காலங்க ளிலும் ஈழத் தமிழர்களுக்கான எல்லாவி தமான ஆதரவையும் உதவிகளையும் செய்தவர்கள் தமிழக மக்கள்.

உலகத்தில் ஒடுக்கப்படும் மக்களுக் காக குரல் கொடுக்க இந்தியா தயங்கிய தில்லை. பாலஸ்தீனம், தென் ஆபி ரிக்கா, தீபேத், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் நசுக்கப்படும் மக்களின் விடு தலைப் போராட்டத்துக்காக ஆதரவு கொடுத்தது இந்தியா. கடந்த காலங்க ளில் ஈழத் தமிழர் போராட்டத்தை உலக அரங்கில் கொண்டு சென்றதில் இந்தியா வுக்கு பெரும் பங்கு உண்டு. புவியியல் ரீதியாக இலங்கைக்கு அருகில் இருப் பது இந்தியாதான். அதனால் ஈழத் தமி ழர்களின் அபயக் குரல் முதலில் எதிரொ லிப்பதும் அபயம் அளிப்பதும் இந்தியா தான். மேலும் சர்வதேச அரசியல் அரங் கில் இந்தியாவை மீறி வேறு எந்த நாடும் இலங்கையின் இனப் பிரச்னையில் நேரி டையாக தலையிடாது, ஆகவே இந்தி யாவின் ஆதரவின்றி ஈழப் போராட் டத்தை முன்னெடுத்துச் செல்வது மிக வும் சிரமம்.

ஈழத் தமிழர்பால் அனுதாபம் கொண்டிருந்த இந்திய மக்கள் ராஜிவ் காந்தியின் கொலைக்கு புலிகள்தான் காரணம் என்றதும் அனுதாபம் வெறுப் பாக மாறியது. இன்று புலிகள் தோல்வி கண்டு 'பின் வாங்கி ஓடுவதற்கு முக்கிய காரணம் இந்தியாவின் ஆதரவின் மையே. ஈழத் தமிழ் மக்களையும் புலிக ளையும் வேறு படுத்தி பார்க்கும் தன்மை இந்தியாவில் வளர்ந்து வருகிறது. இவ் வேளையில் ஈழப் போராட்டத்துக்கான இழந்த ஆதரவினை மீண்டும் பெறுவது எங்கள் கடமையாகும். உலகத்தின் தார் மீக ஆதரவு இன்றியமையாதது. அதி லும் இந்தியாவுக்கு தார்மீகக் கடமை உண்டு. புலிகளது கொள்கையின் தவறு களே எங்கள் மொத்த மக்களையும் பாதிக்கிறது. அதுவே இந்தியாவையும் பாதித்துள்ளது. இந்தியாவை ஓர் எதிரி நாடாக ஈழத்தவர் பார்த்தால் எது எங்கள் தாயகத்தைப் பாதிக்கும். புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்தும் வளர்த்துவிட் டதும் இந்தியாதான். இது உலகம் அறிந்த ரகசியம். ஈழத்தை வென்றெ டுக்க இந்தியா பக்கபலமாக இருக்க வேண்டும். ஈழமக்களை இந்தியா கைவிட்டு விட்டதாக இதுவரை கூற வில்லை. மௌனம் தான் சாதிக்கிறது. அதற்கான காரணங்களை நாம் தேடி அலைய வேண்டியதில்லை. புலிகள் தான் வேறுயாருமல்ல! ஈழத்துக்கு அரு கில் இருக்கும் ஒரே நாடு இந்தியாதான். இந்தியாவை நிராகரிக்கும் அளவு இந்தி யாவின் பக்கம் தவறுகள் அரிது. தவறு கள் எல்லாம் நம்மவர் மீதுதான்.

**கேள்வி:** சந்திரிகாவின் தீர்வு திட் டத்தை தமிழ் கட்சிகள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகளை அழைத்து கொழும் பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகம் கேட்டுக் கொண்டதாமே.

சே.கண்ணன்
வெள்ளவத்தை,
கொழும்பு.

**பதில்:** இது கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகள் இலண்டனிலும் ஜெர்மனியி லும் கிளப்பிவிட்ட புரளியே. இதில் உண்மை ஏதுமில்லை. சென்ற மாதம் ENDLF, LTTE தவித்த ஏனைய தமிழ் கட்சி கள் தீர்வு திட்டம் தொடர்பாக பேசுவ தற்கு சந்திரிகாவை சந்தித்தனர். ஆனால் சந்திரிகாவோ தீர்வு திட்டம் பற்றி பேசா மல் பாராளுமன்ற தெரிவுக் குழுவுடன் பேசும்படி கூறிவிட்டார். அதன் பிறகு தமிழ்க் கட்சிகளை தனித்தனியாக அழைத்துப் பேசி உள்ளார். சந்திரிகாவு டன் தனித்தனியாகப் பேசிய பின், கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகள் ஒத்த கருத்து ஏற்பட கூடிப் பேச முன் வருவ தில்லை. தமிழ் கட்சிகள் ஒருங்கி ணைந்து செயல்படக்கூடாது என்று National Investigation Bureau (NIB) மிரட்டி உள்ளதாக தெரிய வந்துள்ளது. சந்திரிகா வின் தீர்வு திட்டத்தை ஏற்கும்படி இலங்கை அரசு தமிழ் கட்சிகளை நிர்பந் திக்கலாம். தீர்வு திட்டம் திருப்தி அளிக் கவில்லை என்று அறிக்கைகள் விட்ட கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகள் சந்தி ரிகாவின் மிரட்டலுக்கு அடிபணிய நேரி டலாம் என்பதற்காக பழியை வேறு இடத்தில் போட்டுவிட்டு தங்களின் முடியாமைக்கு நியாயம் கற்பிக்கும் நோக்கத்தில் பரப்பி விடப்பட்ட வதந் தியே இந்தியா தங்களை அழைத்து பேசி யது என்பதாகும்.

ராஜீவின் மரணத்துக்குப் பின்னர் ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா இன்று வரை எந்த வடிவத்திலும் தலை யிட்டது கிடையாது. ஈழ விடுதலைப் போரைப் பின்னடையச் செய்ததில் PLOT, EPRLF போன்ற இயக்கங்களுக்குப் பெரும் பங்குண்டு. இவர்களது சேவை தான் மேற்கண்ட புரளியாகும். ●

# கூத்தர் சிரிக்கிறார்

## வெட்கங்கெட்டதுகள்



*தலைநகரில் அரசியல் வியாபாரம் செய்ற நவக்கிரக கூட்டுகள் ஒன்றாக அதி உன்னத அம்மையாரைப் பார்த்தினமாம். உதுகளின் கதையை அம்மையார் காதிலே போட்டுக்காம தன் வேலையை பார்த்து கொண்டு இருந்தாராம். அவமானத்தில் நொந்து போன தலைகள் தலையை தொங்கப் போட்டுக் கொண்டு வெளியேற, அம்மையாரின் செல்லங்களான நவரத்தின்ங்கள் ஒன்றின் பக்திமானான தலைவரும் தேவமான முதலைத் தலைவரும் கொண்டு வருந்திருந்த கோப்புகளுடன் அம்மையாரின் சேல் தலைப்பில தொங்கிக் கொண்டு போனவையாம். கோப்பில் தமிழர் பிரச்சனை பத்தி ஒன்றுமில்லையாம். எல்லாம் கையெழுத்துக்குத்தானாம். வசதியை பெருக்க அலுவல் பார்க்கினமாம். தமிழனின் மானத்தை வித்துப்போட்டு கையெழுத்து வாங்கினம் இந்த வெங்கங்கெட்டதுகள்.*



படிப்பகம்

www.padippakam.com



# உன் அடிச் சுவட்டில் நானும்



இன்னும் என்னவெல்லாமோ அவர் கூறியது கப்பல் புறப்படும்வரை கேட்டுக் கொண்டே இருந்தது. இந்தப் பாசக் குரலைக் கேட்டு அவர் துடித்த துடிப்பைப் பற்றி பலமுறை என்னிடம் கூறியதுண்டு."

"ஒரு தொழிலை முறையாகக் கற்றுக்கொள்வதற்கு முன்னர், தகப்பனாரையும் காணமுடியாது போகவே, ஆட்டோரிக்ஷா ஓட்டும் வேலையில் அமர்ந்தார். ஆனால் நகரத்திற்கு புதியவராகையால் சரியான வழி தெரியாமல் சுற்றி வளைத்துக்கொண்டு செல்வார். இதனால் கோபமடையும் வாடிக்கைக்காரர்கள் இவருக்குச் சேரவேண்டிய பணத்தையும் பிடித்துக்கொள்வார்களாம். சில சமயங்களில் பிரயாணியிடமே வழி கேட்டால், பிரயாணிகளின் மோசமான மனநிலைமைகளில் திட்டு திட்டென்று திட்டிவிட்டு வேறு வண்டி பார்த்துக் கொண்டு போய்விடுவார்கள். அவர்கள் ஒரு பைசாக்கூட இவருக்குக் கொடுப்பதில்லை. பல சமயங்கள் பட்டினியாகவே கழியும். வாழ்வின் இந்தக் காலம் கடுமை நிறைந்திருந்தது. சில சமயங்களில் அவர் சொல்வதுண்டு; வயதானவர்கள், கடினமாக உழைக்க முடியாதவர்கள்தான் வாழ முடியாமல் திண்டாடுகிறார்கள் என்று சிலர் எண்ணலாம். ஆனால் இளைஞர், உடலுறுதியுள்ளவர்கள் காலை முதல் மாலைவரை உழைத்தும் வயிற்றுக்குச் சோறில்லை!

அவரைச் சுற்றிலும் வாழ்ந்தவர்களில் பலர் ஏராளமாகப் பணம் கையில் வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று புரியாமல் விழிக்கிறார்கள். "என்னுடைய ஆட்டோரிக்ஷா முதலாளியை எடுத்துக் கொள். அவருக்கு அவருடைய குடும்பத்திற்கும் வாடகைக்கு வண்டி எடுத்த ஏழைகளிடம் பணம் வதூல் பண்ணுவது தவிர வேறு வேலை கிடையாது. ஆனால் அவர்களுக்கு உண்பதற்கும், உடுப்பதற்கும் நிறைய இருக்கிறது. அவர்களால் இந்த ஏழை டிரைவர்களைத் திட்டவும், கேவலப்படுத்தவும் முடியும். அதற்கு அவர்களுக்கு உரிமையும் இருக்கிறது".

"கொஞ்சக் காலம் கழித்து தூரத்து உறவு சித்தப்பா ஒருவர் இவருக்கு மின்சார உதவியாளராக ஒரு வேலை வாங்கிக் கொடுத்தார். இந்த வேலையில் இரண்டு கம்பெனிகளில் பட்டினிச் சம்பளத்திற்கு வேலை செய்தார். பிறகு அங்கிருந்து 'நகாக் அன்'னிற்கு வந்து கைது செய்யப்படும் வரை அங்கிருந்தார்.

வெய்யிலில் காயும் நேரம் கழிந்துவிட்டது. ஜெயில் வார்டர்கள் எங்களை நோக்கி 'செல்'களுக்குள் செல்லும்படி உத்தரவிட்டார்கள். அதன் பிறகு அப்படிப்பட்ட நேரம் கிடைத்த போதெல்லாம் என்னுடன் இருந்த கைதிகள் ட்ராயைப் பற்றி மேலும் மேலும் கேட்டறிந்து கொண்டார்கள். அவரைப் பற்றிச் சொல்வதற்கு நான் கொஞ்சம் வெட்கப்படுவதுண்டு. அப்பொழுது சகோதரி 'எக்ஸ்' சொல்வதுண்டு:

'நாமெல்லாம் சிறைக்குத் தள்ளப்பட்டவர்கள், அத்தோடு நாள்தோறும் கொடுமையை அனுபவித்து வருகிறவர்கள். ஆகையால் நமக்கெல்லாம் தைரியம் ஊட்டக்கூடிய முறையில் சிறந்த வீரவாழ்க்கை உதாரணங்களையும், வீரத் தோழர்களின் புரட்சிகர போராட்ட வரலாறுகளையும் கூறவேண்டும். இத்தகைய செய்திகள் ஒவ்வொரு சோதனையை எதிர்நோக்கவும், இன்னும் ஆழமாக எதிரிகளை வெறுக்கவும் புதிய சக்தியைக் கொடுக்கும். நான் இன்னும் அதிகமாக ட்ராயைப் பற்றி அறிய விரும்புகிறேன். அதோடு அவருடைய வீர சாகஸங்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் விரும்புகிறேன். சகோதரர் டாங்கைப் பற்றிக் கவிதைகள் இருக்கின்றன. சகோதரர் ட்ராயைப் பற்றியும் இந்தச் சிறைகளில் கவிதை இருக்க வேண்டும்" என்பார்.

ஒரு நாள் சில போலீஸ்காரர்கள் என்னை அழைத்தார்கள். அவர்கள் என்னிடம் "நீ உன் கணவனைப் பார்க்க போகிறாயா ?" என்றார்கள். நான் மின்னல் வேகத்தில் எந்த நேரத்திலும் தயார் என்றேன்.

"ஆனால் ஒரு நிபந்தனை: அவனை ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க வற்புறுத்த வேண்டும் " என்றனர். நான் அமைதியாக இருந்தேன். கணவனை வசப்படுத்துவதற்கு "மென்மையான" மனைவியைப் போலீஸகாரர்கள் பயன் படுத்துவது அவர்களது தந்திரங்களில் ஒன்று என சகோதரி 'எக்ஸ்' கூறியது எனக்கு நினைவில் இருந்தது. அந்த தந்திரத்தை என்மீது இப்போது திணிக்க முயல்கிறார்கள். என்னை அவசரமாகச் சிறைக்கு வெளியே கொண்டுவந்துவிட்டார் கள். ஆகையால் அவருக்கென எவ்வித உணவுப் பொருட்களும் வாங்கிக்கொள்ள முடியவில்லை.

கொஞ்சகால ஓய்விற்குப் பிறகு அவர் கொஞ்சமாவது இழந்த சக்தியைத் திரும்பப் பெற்றிருப்பார் என்றே நம்பிக் கொண்டிருந்தேன். ஆனால் அவரை நேரில் பார்த்தபோது, முதன் முதலாகப் பார்த்தபோது இருந்ததைப் போலவே இருந்தார். அவர் மிகவும் வெளிறிப்போய், தலை முடியெல்லாம் நீண்டு வளர்ந்து காதை மறைத்துக் தொங்கிக்கொண்டிருந்தது. நாடியில் மேடும் பள்ளமுமாக வீக்கங்கள் இருந்தன. சொல்ல முடியாதபடிக்கு அழுக்காகவும் இருந்தார். தன்னுடைய நீல நிற நரம்புகள் புடைத் திருக்கும் மெலிந்த கரங்களால் என்னுடைய கையைத் தொட்டு உட்காரும்படி செய்தார்.

"நான் நன்றாக இருக்கிறேன் இப்பொழுது, சுகமாக இருக்கிறேன்".

மேலே சட்டை ஏதுமின்றி திறந்த மார்புடன் இருந்தார். உடலில் வேர்வையால் நனைந்த துணியொன்று மூடி இருந்தது. வாரப்படாத தலை முடி முகத்தை மறைத்துத் தொங்கிக் கொண்டிருந்தது. அதனை நான் மெல்ல பின்புறமாகக் கோதிவிட்டு இப்பொழுது சுகமாக இருக்கிறீர்களா ?" பரவாயில்லையா, என்றேன். இதற்கு அவர் பதில் சொல்வதற்கு முன்னதாக ஒரு போலீஸ்காரன் என்னை அவரிடமிருந்து பிரிக்க முயற்சித்தான். ட்ராயுடைய கை என்கரங்களை கெட்டியாகப் பிடித்திருந்தன. முரட்டுத்தனமான துள்ளலுடன் அந்தக் காட்டுமிராண்டி அவரிடமிருந்து என்னை ஒரே இழுவையில் இழுத்து, என் கணவரிடம், உன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டுவிடு. அல்லது, உன்னைபொதுப் போலீஸ் இலாகாவிற்குக் கொண்டு செல்வேன். அங்கே இன்னும் கொஞ்சம் சித்திரவதை கிடைக்கும். அதற்குச் சம்மதமா, நீ தாங்குவாயா ?" என்றான்.

"நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. ஒன்றே ஒன்றை மட்டும் ஏற்றுக்கொள்கிறேன். மக்நமாராவைக் கொல்ல முயற்சி செய்தேன், ஆனால் வெற்றிபெற முடியவில்லை" என்றார்.

"நீ மட்டும் ஒப்புகொள்ளவில்லையென்றால், 'விசேஷமான விருந்து' கொடுக்கவேண்டிவரும். அது மட்டும் நடக்குமானால், பிறகு எங்களைக் கொடுமைக்காரர்கள் என்று கூறக்கூடாது. நீ முழுமையாக ஒப்புக் கொள்ளாவிட்டால் உன் மனைவி கிறையிலேயே அழிய வேண்டியதுதான்" என்றான்.

ட்ராய் அவனை முறைத்துப் பார்த்துக்கொண்டே இருந்தார். அந்தக் காட்டுமிராண்டி கடுஞ்சினத்தோடு "நீ விடுதலை பெற்றுப் போவதற்காக நான் வாயிலைத் திறப்பது இதுவே கடைசித் தடவையாகும். இன்னும் நீயோ மறுக்கிறாய். இங்கேயே இவ்வளவு காலமும் பூட்டப்பட்டுக்கிடக்கிறாய். இங்கு உட்கார்ந்து கொண்டு அமெரிக்க ஆலோசகர்கள்மீது அவதூறுச் சேற்றை வாறியடித்துக்கொண்டுருக்கிறாய். இங்கே உனது கூட்டாளிகளிடம் பேசியது அத்தனையும் ஒரு 'டேப் ரிக்கார்டரில்' பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நீ சொன்னதெல்லாம் திரும்பவும் கேட்டுப் பார்க்கிறாயா ? அமெரிக்கப் பாதுகாப்புக் காரியதரிசியையே கொல்ல முயன்றாய். இப்பொழுது தேசிய ராணுவத்தை அவதூறாகப் பேசுவதோடு, பிதமரையும் இழிவாகப் பேசுகிறாயே!" என்றான்.

"நான் என்றைக்கும் என் உணர்ச்சிகளை மறைத்து வைத்துக் கொண்டதில்லை. பச்சையான உண்மைகளையே நான் வெளிப்படையாகப் பேசுகிறேன். நீ இங்கே கொண்டுவரும் பத்திரிகைகளில் அமெரிக்க ஆலோசகர்கள் வானளாவப் புகழப்படுகிறார்கள்; அவர்களை வியத்நாம் மக்களின் நண்பர்கள் என்று அழைக்கிறார்கள். அந்தப் பத்திரிகைகளை சுக்குநூறாகக் கிழித்தெறிந்துவிட்டேன். ஏனென்றால் அவர்கள் புளுகுகிறார்கள். ஆகவே அந்த பத்திரிகை படிக்கும் ஒவ்வொருவரும் அமெரிக்க ஆலோசகர்கள் வியத்நாம் மக்களின் பரமவைரிகள் என்றும், அவர்களில் கடைசி மனிதன் இருக்கும் வரை அழிக்கப்படவேண்டும்

**சனநாயகத்தில் அரசை மக்களே தேர்ந்தெடுப்பதால் எமது அரசு எனும் உரிமையில் தேசப் பற்று வளர்கிறது.**

படிப்பகம்

www.padippakam.com



என்றும் உணரவைக்க வேண்டும் என்றே விரும்புகிறேன்" என்றார் ட்ராய்.

ஒரு கவரிலிருந்து சில தாள்களை உருவி அதில் ட்ராயைக் கையெ முத்திடும்படி கோரினான். அவற்றை அவன் படித்துக்காண்பித்துவிட்டு, அவரிடம் "நீ இந்த குற்றத்தைச் செய்ய வியத்காங்கிடமிருந்து எவ்வளவு பணம் வாங்கினாய் என்று சரியாகச் சொல்லியாகவேண்டும்" என்றான்.

ட்ராய் படுக்கையில் படுத்தவாறே, தலையை மட்டும் சற்றுத் தூக்கி, "காசுக்காக இந்த அமெரிக்கர்களை எதிர்க்கவில்லை. ஆனால் எதற்காக என்றால் அவர்களைக் கொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன்? தென்வியத்நாமை அடக்கு முறையிலிருந்து முழுமையாக விடுதலைப் பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் எல்லாவற்றையும் செய்தேன் அவ்வளவுதான் போதுமா?" என்றார்.

அவன் என்பக்கம் திரும்பி, "உன் கணவனை உண்மையை ஒப்புக் கொள்ளச் சொல். இல்லையென்றால் அவன் சாகப்போகிறான்" என்றான்.

"அவருடைய நடவடிக்கைகளைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது; என்ன விஷயத்தை அவரை ஒப்புக்கொள்ளச் சொல்லவேண்டும்" என்றேன்.

ட்ராய் படுக்கையில் காலை நன்றாக நீட்டிப் படுத்துக் கொண்டார். கைகள் பக்கத்தில் கிடக்க, பார்வை முகட்டில் பதிந்திருந்தது. முகம் அமைதியுற்று குளிர்ந்திருந்தது; யாரைப் பற்றியும் கொஞ்சமும் சட்டை செய்யாமல் படுத்திருந்தார்.

"காங்லி பாலத்தை வெடிவைத்துத் தகர்க்க விரும்பியவன் நீதானே?" என்றான் போலீஸ்காரன்.

"அமெரிக்கப் பாதுகாப்புக் காரிய தரிசி மக்நமாராவைக் கொல்லவேண்டும் என்பதே என்னுடைய நோக்கம்."

"சன்னல் வழியாக நீ குதித்துச் சாக எண்ணியது, அதன் மூலம் கொஞ்சநஞ்சம் இருந்த துப்புகளையும் அழித்து விட எண்ணினாய் இல்லையா?"

"இல்லை, என்னைப்போன்வர்கள் என்றைக்கும் தற்கொலை செய்து கொள்ள விரும்பவேமாட் டார்கள். நான் மேலும் உயிரோடு இருந்து, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களைக் கொல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காகவே சன்னல் வழியாகக் குதித்தேன். நான் அப்பொழுது இறந்து போயிருந்தால் அது ஏதாவது விபத்தாகத்தான் இருக்கவேண்டும்."

காட்டுமிராண்டிக் கும்பலில் ஒவ்வொருவராக மாறி மாறிக் கேள்வி கேட்டார்கள். அவருடைய நோக்கத்திற்கு அவதூறு கற்பிக்கும் நோக்குடனேயே அவர்களது கேள்விகள்



இருந்தன. சைகோன் மக்களும், குறிப்பாக மாணவர்களும் பெருமிதத்தோடு பாராட்டும் வீரஞ்செறிந்த நடவடிக்கையை கேவலப்படுத்தும் நோக்குடனேயே பேசினார்கள். பிறகு அவர்கள் அவரை வலுக்கட்டாயமாக உட்கார வைத்து பல கடிதங்களில் கையெழுத்து வாங்க முயற்சித்தார்கள். அவற்றை வரிசையாகப் படித்துவிட்டு, ஒவ்வொரு வரியாகப் பேனாவினால் கோடிட்டு அழித்துக் கொண்டே வந்தார். அந்தத் தாள்கள் வெறும் கிறுக்கல்களாகவே மிஞ்சின. பிறகு அந்தப் பேனாவை அவர்கள் முகத்தில் வீசி எறிந்து விட்டுப் படுத்துக்கொண்டார்.

தங்களது வழிக்குக் கொண்டு வர முடியாமல் தோற்றுப்போகவே, முன்பைக் காட்டிலும் இன்னும் கொடுமையான மிருகத்தனமான சித்திரவதைகளைக் கையாள முற்பட்டனர். என்னை முரட்டுத்தனமாகக் கதவுப்பக்கம் தள்ளி, ட்ராயிடம் ஒரு வார்த்தைகூட பேசவிடாது செய்தனர். முற்றத்தில் நின்று அழுதுவிட்டேன்! பிறகு என் கணவரிடம் செல்ல முயன்றபோது, இரண்டு முரடர்கள் என் இரு கைகளையும் பிடித்துத் திருகி 'தரதர' வென்று இழுத்துக்கொண்டு போய்க் காரில் போட்டனர்.

என்னுடைய சிறைக்குத் திரும்பி, செல்லுக்குள் தள்ளப் பட்டவுடன் என்னுடைய சிநேகிதிகள் சூழ்ந் கொண்டார்கள். 'ஏ'யும் 'ஓய்'யும் என்னை சமாதானப் படுத்த மிகுந்த சிரமப்பட்டார்கள். பின்னர் எப்பொழுதெல்லாம் என் கண்ணீர் தெரிகிறதோ அப்பொழுதெல்லாம் என் கவலைகளை மறந்து வேறு திசையில் கவனத்தை திருப்ப ஏதாவது கதைகளைச் சொல்வார்கள் அல்லது இதைச் செய், அதைச் செய் என்று நிறைய வேலை ஏவுவார்கள். நான் வெண்பனி நிறத்தில் இரண்டு தலையணை உறைகளைத் தைத்து முடித்தேன். அதன்மீது பூப்போடுவதற்கும் என்னுடைய பெயரையும், ட்ராயுடைய பெயரையும் பொறிப்பதற்கும் சகோதரி 'ஓய்' எனக்குக் கற்றுக் கொடுத்திருந்தார். அவளுடைய கைவிரல்கள் ஊசி பாய்ச்சப்பட்டதால் இன்னும் வீங்கியிருந்த போதுகூட, கடினமான பாகங்களைப் பின்னுவதற்குத்தானே ஊசி எடுத்துப் போட்டுக் காட்டுவாள். "நீ இவற்றையெல்லாம் பின்னி முடித்த பிறகு உன் கணவருக்கு எடுத்துப் போய்க் கொடு. செல் நம்பர் 4-ல் இருக்கும் கைதிகள் தரும் திருமணப்பரிசு என்று சொல்லிக் கொடுத்துவிடு: இது சற்றுக் காலத்தாமதமானாலும் கூட, அவர் இந்த அன்புப் பரிசை ஏற்றுக் கொள்வார்" என்பார். நாங்கள் பின்னல் வேலை செய்யும்போது, சகோதரி 'ஓய்'க்கும் பிடித்தமான "நமது வீரர்களுக்கு ஆடைசெய்கிறோம்" என்ற பாடலை மெதுவாகப் பாடுவோம்.

புதிய கைதி ஒருவன், நான்கே வயது நிரம்பியவன், தனது பாட்டி கைது செய்யப்பட்ட அதே நேரத்தில் கைது செய்யப்பட்டவன், எங்கள் சிறைக்கு வந்து சேர்ந்தான். அவன் ஒரு விவசாயி வீட்டுப் பிள்ளையைப் போல காட்சி அளித் தான். அந்தச் சிறைச்சாலையின் முற்றத்தில் 'சுதந்திரமாக' உல்வ விட்டிருந்தார்கள், அவனுடைய பாட்டி என்னுடைய 'செல்'லுக்குச் சற்று தொலைவில் அடைக்கப்பட்டிருந்தாள்.

அவன் ஒவ்வொரு 'செல்'லாக உற்று உற்றுப் பார்த்துக்கொண்டே ஆவலோடு வேகமாகச் சென்றுகொண்டிருந்தான். சில சமயங்களில் மூச்சிரைக்க ஓடுவான். முற்றத்தில் பறவைகள் உட்கார்ந்தவுடன் அவற்றின் பின்னாலே ஓடி, எங்களையும் உதவிக்குக் கூவி அழைப்பான்.

தொடரும்.

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

*எனது கழுத்தைப் பிடித்த சிறிய புலி ஒன்று தெருவரைக்கும் தள்ளிக் கொண்டு வந்து, இந்த இடத்திலிருந்து அஞ்சு நிமிசத்துக்குள் நீங்கள் காணாமல் போக வேண்டும். இல்லையென்றால் நீங்கள் இரண்டு பேரும் காணாமல் போய்விடுவீர்கள் என்று சிறிய துவக்கு ஒன்றைக் காட்டி மிரட்டினார். அம்மா, ஐயோ என்று அழுது கொண்டே, ''அவள் மட்டும்தான் மிஞ்சியிருக்கிறாள். எங்களை விட்டு விடுங்கள். இங்கு இனிமேல் வர மாட்டோம்'' என்று கூறி என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து விட்டா!*

*மறுநாள் தெரிந்தவர்கள் வீடுகளுக்குச் சென்று விசாரித்தோம். பலன் இல்லை. தம்பிகளது சினேகிதன் ஒருவர் அரியாலையில் இருக்கிறான். அவனைக் கேட்டால் ஏதாவது தெரியும் என்று நான் தனியாக அவனது வீட்டுக்குச் சென்றேன். என்னை அறிமுகப்படுத்தி எனது தம்பிகள் பற்றிக் கேட்பதற்கு முன்னர் அந்த வீட்டினிலிருந்த அனைவரும் அழத் தொடங்கி விட்டனர். எனது தம்பிகளைக் கேட்டால் இவர்கள் ஏன் அழுகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. சற்று நிதானித்து, நீங்கள் ஏன் அழுகிறீர்கள் என்று கேட்டேன். எனது மகன் ரவியையும் உனது தம்பிகள் இருவரையும் அந்த அறுவான்கள் தான் வந்து பிடித்துக் கொண்டு போனாங்கள் என்று கூறி மீண்டும் அழத் தொடங்கினார்கள்.*

*எனக்கு இடி விழுந்தது தலையில். நான் அழுவதா, அழுபவர்களுக்கு ஆறுதல் கூறுவதா? அண்ணனுக்காக அழுது குளறித்தான் பழக்கமே அல்லாமல் ஆறுதல் கூறி எனக்குப் பழக்கம் இல்லையே! மூன்று மணிநேரமாக நான் அவர்கள் வீட்டுத் திண்ணையில் ஓரமாய் உட்கார்ந்து விட்டேன். இப்போ அவர்கள் எனக்கு ஆறுதல் கூற ஆரம்பித்தனர். என்ன செய்வது விடுதலை என்று கூற நாம் ஏமாந்து விட்டோம். எங்கள் இனம் விடுதலை பெற இன்னமும் பக்குவம் அடையவில்லை. அதற்கு முன்னரே இளைஞரது கைகளில் ஆயுதங்கள் வந்துவிட்டன.*

*சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்பார்கள். அதுபோன்று ஆகிவிட்டது. யாழ்ப்பாணத்துக்கு ஏனம்மா விடுதலை? சிங்களரினால் பாதிக்கப்படுவது மட்டக்களப்பு. திருகோணமலை, வவுனியா மன்னார் என்று ஈழத்தின் எல்லைப் பகுதிகள்தான். இங்கே கொழுப்பெடுத்து திரியும் இவர்களுக்கு விடுதலை அவசியமில்லை. பதவிப் பேராசைதான் இந்த அழிவுக்கு காரணம் என்று தொடர்ந்து கொண்டே போனார் அங்கிருந்த பெரியவர் ஒருவர்.*

*நான் வீட்டாரிடம் கேட்டேன். பிடித்துக் கொண்டு போனவர்களைப் பார்த்தீர்களா என்று. சுட்டுப் போட்டு விட்டார்களாம். பிரேதங்களை என்றாலும் தாங்கோடா என்று கேட்டுப் பார்த்தோம். இந்தப் பக்கம் யாரும் வரக்கூடாது, வந்தால் உங்களையும் சுட்டுப் போட்டு விடுவோம் என்று விரட்டி அனுப்பி விட்டார்கள். இதன் மூலம் எனது தம்பிகளும் சுடப்பட்டது உறுதியானது. நான் விடைபெற்று வீடு திரும்பினேன். தம்பிகள் இருவரும் இந்தியாவுக்குத் தப்பிச் சென்று விட்டார்கள் என்று அம்மாவிடம் பொய் சொன்னேன். வேறு வழி எனக்குத் தெரியவில்லை. அம்மாவும் நம்பி விட்டா.*

*இந்திய - இலங்கை ஒப்பந்தம் வந்தது. ஏதோ பிரச்சனையால் புலிகள் எல்லாரும் காட்டுக்குள் ஓடினர். ஓரளவுக்கு அமைதி திரும்பியது. அம்மாவும் அடிக்கடி தம்பிகளின் தகவல் இல்லை, கடிதம் இல்லை என்று என்னிடம் கேட்டுத் தொல்லைப்படுத்துவா. இந்தியா செல்லலாம் என்று கூறிக் கொண்டே இருந்தேன்.*

*1988ம் ஆண்டு மார்கழியில் என்று நினைக்கிறேன். நாங்கள் எதிர்பார்க்காத அந்த நேரத்தில் திடீரென்று எனது சின்னண்ணன் .. வந்தார். அன்று மறந்த எனது சின்னண்ணனை நேரில் பார்த்த பின்னர்தான் நினைவுக்கு வந்தது. அம்மா அவரைப் பார்த்ததும் அழுது கொண்டு மறுபக்கம் திரும்பி எதற்கு வந்தனீ? இவளையும் கொல்லப் போகிறாயா? என்று கேட்டா. பேசாதேயுங்கோ, அம்மா உங்களைப் பார்த்து விட்டுப் போகத்தான் வந்தேன் என்று கூறி விட்டுத் திரும்பினார் புறப்பட. சாப்பிட்டு விட்டுப் போகும்படி கூறி சாப்பாடு கொடுத்தேன். மிஞ்சி இருப்பவர் இவர் மட்டும்தானே எப்படி நிராகரிப்பது. என்றாவது திருந்தி எங்களிடத்தில் வருவார் என்று நினைத்திருந்தேன். நீங்கள் எங்கும் செல்ல வேண்டாம். இங்கேயே தங்கிவிடுங்கள் என்று கூறினேன். இல்லை, நான் போக வேண்டும். பிறகு ஒரு நாள் வந்து சந்திக்கிறேன் என்று கூறிச் சென்று விட்டார்.*

*மூன்று மாதங்கள் கழித்து ஓர் நபர் எங்கள் வீட்டுக்கு வந்தார். உங்கள் சின்னண்ணனை ஈறப்பெரிய குளத்தில் வைத்து சிங்கள ஆமிக்காரங்களோட சேர்ந்து புளொட் ஆட்கள் சுட்டுக் கொன்று விட்டனர். இதனை உங்களிடத்து தெரிவிக்கும்படி சின்னண்ணனது கூட்டாளி ஒருவர் அறிவித்திருந்தார் எனக் கூறினார். அன்றுடன் முடிந்தது எங்கள் குடும்பத்தின் கதை. அம்மா பெரிதாக அழவில்லை.*

*இந்திய இராணுவம் வெளியேறுவதற்கு முன்னர் நானும் அம்மாவும் படகு ஏறி அகதிகளாக இந்தியா வந்தோம். எங்கள் நிலையைப் பார்த்தீர்களா? எங்களுக்கு ஈழம் தேவைதானா? இப்படியான ஓர் விடுதலை யாருக்கு லாபமளிக்கும்? உங்கள் பத்திரிகையில் போராட்டத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் பற்றிக் கேட்டிருந்தீர்கள். இது எங்கள் அனுபவம் அல்ல. தீர்க்க முடியாத வேதனை! இது போன்று யாருக்கும் ஏற்படக்கூடாது. என் அம்மா இன்னும் என் தம்பிகளின் வரவை எதிர்பார்த்திருக்கிறா. பாதி மனநிலை சரியில்லை அவவுக்கு, விடுதலை கோரிய இயக்கங்களுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கூட விட்டு வைக்காது அனுப்பி வைத்தோம். அனைவரையும் விடுதலை வீரர்களே விழுங்கி விட்டனர். போரில் சிங்கள இராணுவத்தால் சுடப்பட்டு அவர்கள் இறந்திருந்தால் நானும், என் அம்மாவும் சந்தோசப்பட்டிருப்போம். சுதந்திரம் எதற்காக, வேண்டாதவன் எவனோ அவனை கொலை செய்யவா? இன்று வரை இதுபற்றி யாரும் அனுதாபப்பட்டது கிடையாது. எங்கள் கதையைக் கேட்பவர்கள் அப்படியா பாவம் என்று விதியை நொந்து கொண்டு சென்று விடுவர். தமிழர்களால் அனாதையாக்கப்பட்ட தமிழர்கள் நாங்கள். இல்லை அகதிகள்! இப்போது சிலோன் அகதிகள் என்றுதான் எங்களை அழைக்கின்றனர்.*

*நான் திருமணம் என்ற பேச்சை மறந்து விட்டேன். எங்கள் இனத்துக்கு சமூகப் பணி செய்ய விரும்புகிறேன். உங்கள் பத்திரிகை மூலம் ஈழக் குழந்தைகளுக்கு பாடசாலை நடத்துவதாக அறிந்தேன். படிப்பிக்கும் அளவுக்கு தகுதி இல்லாவிட்டாலும் வேறு பணிகளுக்கு ஆள் தேவைப்பட்டால் நான் வருகிறேன். அம்மாவையும் அழைத்து வர உதவினால் தொடர்ந்து பணி செய்வேன்.*

**சுதந்திரமும் இறைமையும் ஒன்றை மற்றொன்றிடமிருந்து பிரிக்க முடியாததாகும்.**

படிப்பகம்

www.padippakam.com



# மீண்டும் வேதாளம் கதை சொல்கிறது

## பிஞ்ஞகன்

**பா**ரிசிலிருந்து வெளிவரும் ஈழ நாடு பத்திரிகையில் மறவன் புலவு க.சச்சிதானந்தனின் சிறப்பு கட்டுரை படித்தேன். எவ்வளவு மட்டமான கருத்தை வெளியிட்டுள்ளார். அக்கட்டுரை உண்மையாக ஆதரவு திரட்டும் நோக்கம் கொண்டதாகத் தெரியவில்லை. மாறாக ஈழ விடுதலை போராட்டத்தை சிதறடிக்கும் கருத்தாகவே உள்ளது.

கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி செய்யும் பொழுதும், அல்லது பேரினவாதத்துக்கு எதிராக மக்கள் போராடும் பொழுதும், ஆட்சியாளர்கள் மக்களின் எழுச்சியை அடக்குவதற்குப் பலாத்காரத்தை மட்டும் பயன்படுத்த மாட்டார்கள். மக்களின் எண்ணத்தை திசை திருப்புவதற்காகக் கீழ்த்தரமான வழியையும் கையாழ்வார்கள். பாலுணர்வைத் தூண்டும் மோசமான திரைப்படங்கள், ஆபாச சஞ்சிகைகள் ட்சியாளர்கள் தாராளமாக அனுமதிப் கள். மேலும் போதை பொருள்களையும், விபச்சாரத்தையும் ஊக்குவிப் பார்கள். இனக் கலவரத்தையும், மதக் கலவரத்தையும், சாதிக் கலவரத்தையும் தூண்டி விட்டு மக்களின் சீர்கேட்டில் தங்களின் ஆட்சியை தக்க வைத்துக் கொள்வார்கள். ஏகாதிபத்திய நாடுகளும் காலனி நாடுகளை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்கும் இந்த மோசமான வழிமுறைகளை மேற்கொள்வார்கள்.

இதனைப் போன்றே விடுதலைக்காக போராடும் ஒரே இலட்சியம் கொண்ட போராளிக் குழுக்களிடையில் மோதலை தூண்டிவிட்டு போராட்டத்தை திசை திருப்பிவிடுவர். ஈழ விடுதலைக்காக போராடியப் பல குழுக்கள், கொள்கை ரீதியாகவும், யுத்த தந்திர மூல உபாயத்திலும் முரண்பட்ட சக்தியாக இருந்தாலும், இலட்சியப் பற்றுடன் போராடி வந்தனர். இந்த முரண்பட்ட சக்திகளை முரண்பட்ட எதிரிகளாக மாற்றினால் ஈழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என்று உணர்ந்த சிங்கள அரசு, மொசாட்டின் துணையுடன் செயல்பட்டது. போராளிகள் குழுக்களிடையே மோதலை உருவாக்கி ஈழ விடுதலைப் போராட்டத்தை பலவீனப் படுத்த மொசாட் திட்டமிட்டது. மொசாட்டின் வலையில் விழுந்த புலிகள் அவர்களிடமிருந்து பயிற்சியும், நிதியும் பெற்றனர். இதன் பயனாகத்தான் ஏனையோர் இலங்கை அரசிடம் சென்று மண்டியிட்டனர். இவர்கள் எதிர்பார்த்த பணம், பதவி, புகழ் கிடைத்தன. ஆனால் விடுதலை?

அண்மையில் இந்தியா சென்றிருந்த புலிகளின் தீவிர ஆதரவாளரான இலண்டனைச் சேர்ந்த சின்னமணி, சிவசேன தலைவர் பால்தாக்கரையும் பாரதிய ஜனதா கட்சித் தலைவர் அத்வானியையும் சந்தித்துள்ளார். இந்த சந்திப்பினை அடுத்து பால்தாக்கரே புலிகளை ஆதரித்து இரண்டு தடவை அறிக்கைகளை விடுத்துள்ளார். இது புலிகளது முயற்சியா அல்லது புலிகளை ஆதரிப்பவர்களாக நடிப்பவர்களது சதி முயற்சியா என்பது தெளிவில்லாத ஒன்றாக உள்ளது.

தேசிய இனப் போராட்டத்தை சமய போராட்டமாக சித்தரிக்க முயற்சிக்கிறார் சச்சி. இதுகால்வரை சமய பாகுபாடும் சாதி வேறுபாடும் ஈழப் போராட்டத்தை நெருங்கவில்லை. தமிழர்கள் என்பதற்காகவும் ஒடுக்கப்படும் இனம் என்பதற்காகவும் ஆதரவு கிடைக்கப் பெற்றது. சச்சிதானந்தமோ சைவர்கள் ஆதரவு தர வேண்டும் என்று பழைய சமய வரலாற்று சண்டையைச் சுட்டிக் காட்டுகிறார். இவர் சுட்டிக் காட்டும் சைவ சமயத்தவரும் சமண சமயத்தவரும் தமிழர்களாக ஒரே இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். ஆனால் இன்று நடக்கும் போராட்டமோ தமிழர்கள் சிங்களவர்கள் ஆகிய இரு இனங்களுக்கிடையில் நடக்கும் போராட்டமாகும். உரோமாபுரியிலிருந்தும் அரபு நாடுகளிடமிருந்தும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கிடைத்த உதவிகள் கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் கிடைக்கப் பெற்ற உதவியாக இவர் குறிப்பிட்டுள்ளார். இவரின் இந்தக் கருத்து பொது நலத்துடன் தமிழர்களுக்கு உதவியவர்களை கொச்சைப் படுத்திஉள்ளது. இனப் பிரச்னைக்கு சமய சாயம் பூசி போராட்டத்தை பலவீனப்படுத்தி திசை திருப்பும் நடவடிக்கையே இதுவாகும்.

இந்திய தினமணிப் பத்திரிகையில் கட்டுரை வரைந்து ஈழத் தமிழரை இழிவு படுத்தி தலைகுனிய வைத்தவர். இம்முறை பாரிஸ் ஈழ நாட்டில் மத உணர்வுகளைத் தூண்டியுள்ளார்.

முன்னர் ஈழத் தமிழர்களை மூன்று வகைப்படுத்தி பிரித்து எழுதியவர் இவர். இப்போது ஈழத்தவரை மீண்டும் மூன்றாகப் பிரித்து சைவர், கிறிஸ்தவர், இஸ்லாமியர் என்று வரிசைப்படுத்தி சைவர்களுக்கு சைவர்கள் உதவ வேண்டும் என்று வலிந்து மதப் போதையை ஊட்டப் புறப்பட்டுள்ளார். திருவாடுதுறை ஆதினத்திடமிருந்து இவருக்கு ரூபாய் 35 லட்சம் பெறுமதியுள்ள புத்தகப் பதிப்பு ஒப்பந்தம் கிடைத்திருக்கிறது. சமயப் புத்தகங்கள் அச்சிடுவதே இந்த ஒப்பந்தம். இந்தியாவிலிருக்கும் ஆதீனங்களில் மிகப் பெரியது இந்த ஆதீனம். நான்காயிரம் கோடி ரூபாய் இந்த ஆதீனத்தின் சொத்து மதிப்பு. எப்படியோ உள்ளே நுழைந்து 35 லட்சங்களை பிடித்துவிட்டார். ஈழத்தில் இருக்கும் சைவப் பழங்களில் முதிர்ந்தபழம் மறவன் புலவு சச்சிப்பழம் என்று அடித்துக் கூறியுள்ளார் ஆதீனத்திடம்.

நிறம் மாறுவதில் பச்சோந்தியை மிஞ்சியவர் இவர். புலிகளுக்குப் புலியாகவும், சந்திரிகாவுக்கு சிங்களனாகவும், டக்ளசுக்கு EPDP யாகவும், வியாபாரிகளுக்கு பெரும் முதலாளியாகவும், தமிழ்த் தலைவர்களுக்கு தமிழறிஞனாகவும், ஆதீனங்களுக்கு சைவப் பழமாகவும், இறுதியில் ஈழத் தமிழர்களுக்கு வில்லனாகவும் பல முகங்களைப் பெற்ற புண்ணியவான் இவர்.

தமிழகத்தில் வியாபாரம் செய்யும் இவர் இம்முறை தமிழகப் பத்திரிகைகளை வஞ்சித்து விட்டார். சைவர்களைப் பற்றிச் சொன்னால் சிலவேளை திராவிடக் கட்சிகள் தப்பாக நினைத்து விடுவார்கள் என்பதாலோ என்னவோ தனது கண்டுபிடிப்பை ஐரோப்பாவில் வாழும் தமிழர்களிடத்து வெளிப்படுத்தியுள்ளார்.

ஈழத் தமிழரிடத்து மதத்தால் பகைமை கிடையாது. சமயத்தைச் சுட்டிக்காட்டி பகைமை கொள்ள நீரூற்றி வளர்த்துவிட முயல வேண்டாம். புராணத்தைப் படித்துப் பார்த்து கதை சொல்ல வேண்டாம். ஆதீனங்களுக்குள் புதைந்து கிடக்கும் பணத்தை உங்கள் திறமையால் சுருட்டிக் கொள்ளுங்கள். ஈழத் தமிழருக்காகத்தான் ஈழமே தவிர ஒரு தனிநபருக்காக அல்ல. ஈழத்தில் சுருட்டுவதற்கு எதுவும் இல்லை என்று கண்டதும் தமிழகத்திலுள்ள ஆதீனங்களுக்குள்ளும் நுழைந்து எங்கள் விடுதலையை வீண் செய்யும் பணியை நிறுத்தி விடுங்கள்.

இவரது பலமுகங்களைப் பற்றி
அடுத்த இதழில் காணலாம்.

ஈழநாடு

01 - 07. 03. 1996

## ஈழத் தமிழருக்கு சைவ உலகின் கண்ணோக்கு வேண்டும்

டிலே
ற்படும்
திரு
ருக்கும்
ளைச்சலைத்
ளுக்கி
ல் பின்
ரமோ?
டியேன், பாண்டி நாடு போகிறேன். அங்கே சிறையார் உளார். மங்கையற்கரசி உளார். பாண்டிநாட்டு மக்கள் துயர் துடைக்க வேண்டும். உணவு



கொடுமை எனில் அங்குள்ள சைவ மக்களுக்கு எத்துணை கொடுமையைப் பல்லவன் இழைத்திருப்பான். பல்லவ மன்னனுக்குப் பாண்டிய மன்னன் சளைத்தவனல்லன். அல்லாமலும் புறனுடைச் சமணத் துறவிகள் மன்னரைக் கிடுக்கிப் பிடியாக வைத்திருக்கக் கூடியவர்கள். அவர்கள் ஆட்டுவிக்க மன்னன் ஆடுவான். சம்பந்தப் பெருமானே பாண்டி நாடு செல்லாதீர்கள்.

சிவபெருமானின் அடியவர்களுக்கு நல்லன செய்வன குற்றமற்ற நன்மையைச் செய்வன எனச் சம்பந்தர் தமது பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் மீள மீள வலியுறுத்தினார். ஒவ்வொரு அடியிலும் நல்ல என்ற சொல்லை நான்கு முறை கூறி, அந்த நன்மை, அடியார்க்கு மிகுந்து வரும் எனக்

உரிமைகள் அனைவருக்கும் வேறுபாடின்றி கிடைத்தன. சமண வேடதாரிகள் தண்டனைக்குள்ளாயினர்.
பாண்டி நாட்டில் அன்றுஇருந்த அதே நிலை இன்று ஈழ நாட்டில் உளது. புனைதுகில் அணியும் புத்தராயுள்ள வேடதாரிகள், தமிழையும் சைவத்தையும் அந்தத்

கிறிஸ்தவ அமைப்புகள், பணம், பொருள், ஆளணி ஆகியவற்றுடன் ஈழத் தமிழரிடைய பணி யாற்ற விரைந்து சென்றன.
பாதிக்கப்பெற்ற இஸ்லாமியர்களுக்கு அரபுநாடுகள் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றார். சைவ சமயத்தைத் தவிர வேறு எந்தச் இந்து சமயப் பிரிவையும் ஈழத்தமிழர் கைக் கொள்வதில்லை. அல்லுற்று ஆற்றாது அழுத கண்ணீருடன் அலமந்து போயிருக்கும் சைவத் தமிழ் மக்களைக் காக்க. உதவிக்கரம் நீட்ட. சைவ சமயத் தலைவர்கள், ஆதினங்கள், அமைப்புகள் முன்வரவேண்டும். திருஞானசம்பந்தப் பெருமானுக்கு இருந்த மனத்திட்பமும், வினைத் திட்டமும் சைவசமய அடியவர்கள், தொண்டர்கள், துறவிகள், தலைவர்கள் யாவருக்கும் தேவை.
ஈழநாடு செல்லவேண்டும்.
மனித உரிமைகள் மறுக்கப்பெற்று அடிப்படை வசதிகள் தடுக்கப்பெற்று வாழ்வதா சாவதா என உள்ளம் உடைந்து உருக்குலைந்து வாழும் நம் சைவ மக்களிற்கு. மந்திரமாவது நீறு என நெற்றில் நீறு பூசி, இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற வாழ்வு உறுதி கூறி நாமார்க்கும் குடிஅல்லோம். நரகத்தில் இடர்ப்படோம், நடலை இல்லோம் என்ற நிலைப்பாட்டை எடுத்துரைக்க; சைவ உலகின் திருக்கண்ணோக்கம் வேண்டும் வேண்டும்.

மறவன்புலவு
**க. சச்சிதானந்தன்**

கொடுப்போம் உறையுள் கொடுப்போம். நோய்கள் போம். புறனுடைச்சமணரின் மைகள் தவிர்ப்போம்.
ர்: என்ன காரியம் ப்பயந்துணிந்தீர்கள். ராயிருப்பவர் ஆட்சி அங்கு கிறது. சைவ மக்கள் கொலை யப்பட்டு உடல் தக்குள்ளாகின்றனர். ர்களின் அடிப்படை மனித மைகள் மறுக்கப்படுகின்றனர். நேரத்தில் தங்களை என்ன டுத்துவர்?
நர்: சமணர்கள் ஏன் காடுமைகளைச் ரர்கள். ஈழத்தில் நம் இக் மைகளைச் செய்கிறார்கள்! அடியேன் சமணர்களுடன் காலம் வாழ்ந்தேன். கொள்கைகளில் ர்வோர் ஒரு சாரார்.

சம்பந்தர்: அப்பர் பெருமானே, நமது தமிழ் மக்கள் துயருறும் பொழுது நாம் சோழ நாட்டில் இருந்து என்ன பயன்? நமது சமயிகள் மனிதர்கள் அல்லவா? அடிப்படை உரிமைகள் உள்ளவர்தாமே! உயிர் வாழக் கூடத் தகுதி அற்றவர்களா? உணவு பெறத் தகுதி அற்றவர்களா? நோயின்றி வாழப் பெறுமதி அற்றவர்களா? சைவ சமயத்தைக் கடைப்பிடித்து நாளும் தமிழ் பேசி வரும் நம் மக்கள் துயர் துடைப்பது நம் தலையாய கடன் அல்லவா? அடியேன் பாண்டி நாடு போவது உறுதி. அடியேனுக்குத் துயர்வரின் எம்பெருமான் பார்த்துக் கொள்வார். அடியேன் புறப்பட வேண்டும்.
அப்பர்: தாங்கள் இவ்வளவு உறுதியாக இருப்பீர்கள் என்பதை அறிவேன். எனவேதான் சோதிடர்களிடம் கலி கேட்டேன். அவர்

அல்லுற்று ஆற்றாது அழுத கண்ணீருடன் அலமந்து போயிருக்கும் சைவத் தமிழ் மக்களைக் காக்க. உதவிக்கரம் நீட்ட. சைவ சமயத் தலைவர்கள், ஆதினங்கள், அமைப்புகள் முன்வரவேண்டும். திருஞானசம்பந்தப் பெருமானுக்கு இருந்த மனத்திட்பமும், வினைத் திட்டமும் சைவசமய அடியவர்கள், தொண்டர்கள், துறவிகள், தலைவர்கள் யாவருக்கும் தேவை ஈழநாடு செல்லவேண்டும்

கூறி, மனிதர் துயர் துடைக்கச் செல்பவர்க்குப் பெரு நன்மை வருமே அன்றித் துன்பம் வராது என்பதைத் தெளிவாக்கினார். .....ஆறு நல்லநல்ல, அவை நல்ல நல்ல, அடியார் அவர்க்கு மிகவே என அந்த வரியை அமைத்தார். அப்பரின் ஆலோசனைகளை மீறி, மனி உயிர் மனிதனின் வைகள்,

தீவில் இருந்தே விரட்டி விடக் கங்கணம் கட்டி உளர்.
புத்த சமயிகள் அல்லாதவருக்கு அடிப்படை மனித உரிமைகள் மறுத்து உளர்.
இந்த அவல நிலை கண்ட கிறிஸ்து சமயத் தலைவர் பாப்பாண்டவர், உரோமாபுரியில் இருந்து வேண்டுகோள் விடுத்தார். ஈழத்தமிழ் மக்களின் அடிப்படை



ஈழ விடுதலைப் போராட்டத்தினால் ஏற்பட்ட அனுபவங்கள் மற்றும் போராட்டம் தொடர்பான ஆலோசனைகள் "ஈழ தேசத்திற்கு" எழுதினால் தரமானவை பிரசுரிக்கப்படும்.



படிப்பகம்

www.padippakam.com



# சந்திரிகா முன் வைத்தது தீர்வு திட்டமல்ல

இலங்கையின் இனப் பிரச்சனைக்கு சந்திரிகா முன் வைத்துள்ளது தீர்வு திட்டமே அல்ல. அது நிர்வாகத்துக்கான அதிகாரப் பரவலாக்கலே. ஒரு நாட்டின் இரு தேசிய இனங்களுக்குள் பிரச்சனைகள் ஏற்பட்டிருக்கும்போது இரு இனங்களும் இணைந்து ஒரு உடன்பாட்டிற்கு வருவதின் மூலமே அப்பிரச்சனைக்கு தீர்வு காண முடியும். ஆனால் இலங்கையில் பெரும்பான்மை இன சிங்களத் தலைவர்கள் தயாரித்து முன் வைக்கும் தீர்வையே சிறுபான்மைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ள நிர்பந்திக்கப்படுகின்றனர். வெள்ளையரிடமிருந்து விடுபட்ட நாள் முதல் இன்றுவரை இதுவே தொடர்கிறது.

இலங்கையில் சிங்கள மக்கள் தமிழ் மக்களை இரண்டாந்தர பிரஜையாக நடாத்தியதால்தான் இன்று நாடே இரத்தக்களரியாக உள்ளது. பெரும் அழிவை நோக்கி இலங்கை செல்லும் இன்றைய நிலையிலும் கூட பிரச்சனைக்கு நல்ல தீர்வினை முன் வைக்காமல் மகள் தாலி அறுத்தாலும் பரவாயில்லை மருமகனை கொலை செய்தே தீருவேன் எனும் மனப்போக்குடனேயே சந்திரிகா செயல்பட்டு வருகிறார்.

## பௌத்தம் தேசிய மதம்

மொழி, கலை, கலாச்சாரம், மதம் ஆகியவற்றின் மாறுபட்ட தன்மையைக் கொண்ட இரு இனங்கள் வாழும் இலங்கையில் பெரும்பான்மை சிங்கள இன மக்களின் மதமான பௌத்தத்தை தேசிய மதமாக சாசன வடிவத்தில் பிரகடனப்படுத்தப்படுவதை எந்த நியாயவாதியாலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

## தேசிய இனம்

ஒரு இனம் தேசிய இனமாக அடையாளம் காட்டும் முக்கிய அம்சமான மொழி, கலை, கலாச்சாரம், பொருளாதாரம், தொடர்ச்சியாக வாழும் பிரதேசங்கள் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டே பல்லினங்கள் வாழும் இந்தியா உட்பட பல நாடுகளில் மாநிலங்கள் அமையப் பெற்றுள்ளன. ஒரு இனம் தன் தனித்தன்மையைப் பேணிப் பாதுகாக்கவும், வளர்க்கவும், மாற்ற முடியாத உறுதி செய்யப்பட்ட அரசியல் அதிகாரம் கொண்ட மாநிலங்கள், அந்த இனத்துக்கு அத்தியாவசியமாகிறது. இவை மறுக்கப்படும்போதுதான் போராட்டம் வெடிப்பதற்கும் நாடு பிரிந்து செல்வதற்கும் காரணமாகிறது.

ஆங்கில, பிரஞ்சு இன மக்கள் வாழும் கனடாவில் இணைந்து வாழ்வதா அல்லது பிரிந்து செல்வதா என்பதற்கான சர்வசன வாக்கெடுப்பு அண்மையில் நடாத்தப்பட்டது. இதில் பிரிவினை வாதத்துக்கு எதிராகவே சிறுபான்மை இன பிரஞ்சு மக்கள் வாக்களித்தனர். அதற்குக் காரணம் அங்கு இரு இனங்களுக்கும் சமமான அரசியல் அதிகாரம் உள்ளதால்தான். இலங்கையில் தமிழர்கள் பிரிந்து செல்வதற்கான போராட்டம் நடாத்துவதற்கு அவர்களுக்கு அரசியல் அதிகாரம் மறுக்கப்பட்டு கொடுமைகள் இழைக்கப்படுவதே காரணமாக அமைந்தது.

## தமிழர் தாயகம்

இலங்கையின் வடக்கு கிழக்கு தொடர்ச்சியாக நிலப் பரப்பில் தமிழர்களே வாழ்ந்து வருகின்றனர். அந்த ஒன்றையே அங்கீகரிக்க சிங்கள அரசுகள் மாறிமாறி பிடிவாதமாக மறுத்து வருகின்றன, தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தை இரண்டாகப் பிரிக்க தமிழர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்ற போதிலும் அதற்கு செவி சாய்க்க சிங்கள அரசு மறுத்து வருகிறது. தமிழர்களின் இந்த நியாயமான உரிமையை மறுப்பதின் மூலம் சிங்களவரின் தீர்வு திட்டத்தை நிராகரிக்க தமிழர்களுக்கு இதுவே போதுமான நியாயமாகும். இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கும் கிழக்கும் இணைந்த மகாணமாக எந்த தீர்வு திட்டத்தில் இருந்தது. ஆயினும் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் இறுதி முடிவு காணப்படும் என்றும் இருந்தது. இருந்தபோதிலும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கும் கிழக்கும் உள்ளடக்கிய ஒரு மாகாண அரசும் செயல்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## இனப்பிரச்சனைக்கு தீர்வு

இலங்கையின் இரு தேசிய இனங்களுக்கிடையில் எழுந்துள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கான தீர்வு திட்டத்தில், தமிழரும் சிங்களவர்களும் ஆட்சி அதிகாரத்தை பங்கிடும் வகையில் தீர்வு திட்டம் அமைந்திருக்க வேண்டும். அதாவது இலங்கையில் இரு மாநில அரசுகளும் மத்தியில் ஒரு அரசும் அமையும் வகையில் இருந்திருக்க வேண்டும். ஆனால் இலங்கையில் வெவ்வேறு பிரதேசத்தில் வாழும் இரு இனங்களுக்கு 9 பிராந்தியங்கள் அமைத்ததின் நோக்கம் என்ன? இது இனப் பிரச்னைக்கு தீர்வாகத் தெரியவில்லை. மாறாக சிங்கள ஆட்சி நிர்வாகத்தைப் பரவலாக்கும் திட்டமாகவே அமைந்துள்ளது.

## சந்திரிகாவின் ஏமாற்றும் திட்டம்

1995ம் ஆண்டு ஆகஸ்ட் 3ல் சந்திரிகா அறிவித்த தீர்வு திட்டத்திலும் 1996 ஜனவரி 16ல் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பித்துள்ள தீர்வு திட்டத்திலும் உள்ள வேறுபாடுகளை கவனிக்கும்போது இவரின் ஏமாற்று அம்பலமாகிறது. 1995 ஆகஸ்ட் 3ல் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில், சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களுடன் முழுமையாகக் கலந்தாலோசித்த பின் வடக்கு, கிழக்கு எல்லைகளை மீளாய்வு செய்து ஒரு மாநிலமாக மாற்றப்படும் என்றார். 1996 ஜனவரி 16ல் பாராளுமன்ற தெரிவு குழுவுக்கு முன் வைத்துள்ள தீர்வு திட்டத்தில் இது தொடர்பாக எதுவும் குறிப்பிடாதது மட்டுமல்ல மாகாணத்தின் எல்லைகளை மாற்றி அமைக்கும் அதிகாரம் மாகாணங்களுக்கு இல்லை என்பதனை மட்டும் குறிப்பிட்டுள்ளார்.

1995 ஆகஸ்ட் 3ல் சந்திரிகாவின் செய்தியில் முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே பிராந்திய ஆட்சியை கலைக்கலாமென்று இருந்தது, ஆனால் 1996 ஜனவரி 16 அன்று சமர்ப்பித்த தீர்வு திட்டத்தில் எந்த அடிப்படையில் பிராந்திய அரசை கலைக்கலாம் என்ற வரையறை எதுவுமின்றி வெறுமனே பிராந்திய அரசை ஆளுனர் கலைக்கலாமென்று மட்டுமே உள்ளது.

1987ல் ஏற்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில்தான் மாகாண அரசைக் கலைக்கலாமென்று விதி இருந்தது. 1990ல் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான வாக்கினால் இந்த விதிமுறை ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் மாற்றப்பட்டது. இப்போது சந்திரிகாவின் தீர்வு திட்டத்தில் இந்த அதிகாரம் ஆளுனருக்கு அப்பட்டமாக வழங்கப்பட்டு விட்டது.

## பறிபோகும் தமிழர் தாயகம்

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் சிங்கள அரசுகளால் திட்டமிட்டுச் சிங்கள குடியேற்றம் செய்யப்பட்டு, இன்று பெரும் பகுதி தமிழர் நிலங்கள் பறிபோய் சொந்த மண்ணிலேயே தமிழர்கள் சிறுபான்மையினராக்கப்பட்டுள்ளனர். இயற்கை வளம் நிறைந்த அம்பாறை மாவட்டம் அரசின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பினால் முற்றாக சிங்களவரிடம் பறிபோய் விட்டது. ஏனைய கிழக்கு பகுதியிலும் குறிப்பாக திருகோணமலையில் பெரும் பகுதி பறி போன நிலையில் உள்ளது. இங்கு இன்றும் குடியேற்றத்துக்கான வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

1987ல் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமையப் பெற்ற மாகாணசபை முறையில், நிலம் தொடர்பான அதிகாரம் மத்திய அரசிடம் இருந்ததால் தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்த மாகாண சபையிடம் அதிகாரம் இருக்கவில்லை. அமைதிப்படை இருக்கும் வரை சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்படும் என்று உறுதியளிக்கப்பட்டதுடன் அமைதிப்படை இருக்கும்போதே இவற்றுக்கான நிரந்தத் தீர்வு காணப்படுவதாக இருந்தது. இப்போது சந்திரிகா அறிவித்துள்ள தீர்வுத் திட்டத்தில் நிலம் தொடர்பான அதிகாரம் பிராந்தியங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள போதிலும் தமிழர் நிலங்களை பறிப்பதற்கான வழிவகைகள் மிகவும் தந்திரமாகப் புகுத்தப்பட்டுள்ளது.

சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தில் பிராந்தியங்களுக்கு அளிக்கப்பட்ட துறைகளில் நீர்ப்பாசனமும் அடங்கும். அதே நேரத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்தியங்களில் ஓடும் நதிகளில் உள்ள பாசனப் பகுதிகள் தொடர்பான திட்டங்களை நிறைவேற்றுவது பொதுப் பட்டியலில் (மத்திய அரசின்) இடம் பெறுகிறது. நிலம் பிராந்தியப்பட்டியலில் இருந்தபோதிலும் பொதுப்பட்டியலில் உள்ள துறைகளுக்கு தேவைப்படும் நிலங்களை மத்திய அரசு கோரும் பட்சத்தில் அந்நிலங்களை பிராந்திய சபையால் வழங்கப்பட வேண்டும் என்று தீர்வு திட்டத்தில் உள்ளது.

இரண்டு அல்லது மேற்பட்ட பிராந்தியங்களுக்கு இடையிலான நீர்ப்பாசனத் திட்டம் பொது பட்டியலில் இருப்பதால், அதற்கு தேவையான நிலங்களை பிராந்தியத்தால் வழங்கப்பட வேண்டும். இந்த விதி முறையினால் தமிழர்களின் நிலங்களில் சிங்கள மக்களைக் குடியேற்ற வழி வகைகள் சந்திரிகாவின் தீர்வு திட்டத்தில் உள்ளது.

அண்டை சிங்கள மாநிலத்திலிருந்துதான் மகாவலி கங்கை திருகோணமலை ஊடாக கடலை அடைகிறது. இந்த நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே பெரும் பகுதி நிலங்கள் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது. இந்த திட்டத்தின் கீழ் இருந்த ''மணலாறு'' என்று இருந்த தமிழ் ஊர் இப்போது சிங்கள குடியேற்றங்கள் செய்யப்பட்டு ''வெலிஓயா'' என்று சிங்களப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு விளங்குகிறது. இதைப் போன்று பல தமிழ்க் கிராமங்கள் இந்த நீர்ப்பாசனத் திட்டத்தால் சிங்கள கிராமங்களாக மாற்றப்பட்டு விட்டன.

## நிராகரிப்போம்

இந்நிலையில் பாரம்பரிய தமிழர் நிலங்களைப் பாதுகாக்க சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் வகை செய்யவில்லை. ஆகவே சந்திரிகா முன் வைத்துள்ள இந்தத் தீர்வு திட்டம் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட வேண்டியவையே. சிங்கள ஆட்சியாளரது தீர்வுத் திட்டங்களில் திருத்தங்கள் செய்ய முற்படுவது எங்களை நாமே ஏமாற்றும் வேலையே அல்லாமல் வேறில்லை.



## வேண்டும் விடுதலை

ஓ... ஈழத் தமிழினமே உனக்கு
துன்பங்கள் என்ன தொடர்கதையா?
தொல்லைகள் உங்கள் வாழ்வின் எல்லைகளா?
இன்னல்கள் உங்கள் இருப்பிடமா?
ஒளியை தேடும் உங்கள் கண்களின்
வெளிச்சம் என்பது வெறும் பேச்சா?
ஒற்றுமை வாழ்வு தேடும் உள்ளங்களே!
உருவிழந்து தவிக்கும் உறவுகளே!
அமைதி தேடும் எமது வாழ்வில்
அவலங்கள் தான் என்றும் அன்பளிப்பா?
உரிமை கோரும் எங்கள் போராட்டம் என்ன
உயிர்களை பலியிடும் பலி பீடமா?
விடுதலை வேண்டி நிற்கும் வீரர்களே!
வேற்றுமையில் வீணே காலத்தை விரயம் செய்யாதீர்கள்.
ஈழம் தழைக்க வேண்டுமானால் இன்றே
எல்லோரும் ஒற்றுமையாக செயல்படுங்கள்
விரைவில் வேண்டும் விடுதலை வீரர்களே!
வேற்றுமையில் ஒற்றுமை கண்டு விரைந்து
சென்றிடுவோம் விடுதலை நோக்கி.

சு.சுமதி
திருச்சி

**ஈழத் தமிழினம் அமைதியாக வாழ வேண்டுமானால் தமது பாரம்பரிய நிலத்தின் மீது உரிமை உடையதாக இருக்க வேண்டும்.**

படிப்பகம்

www.padippakam.com



# அங்கும் இங்கும்

## வவுனியாவில் என்ன சொல்கிறார்கள்

யாழ்ப்பாணத்தை சிங்கள இராணுவம் கைப்பற்றியதைத் தொடர்ந்து இலட்சக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி வன்னியிலும், கிளிநொச்சியிலும் தஞ்சமடைந்துள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி வவுனியா வந்துள்ளவர்களில் ஒருவரான ஒரு பாடசாலை அதிபர் கூறியதாவது, மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும் போது நாவற்குளியில் உள்ள புலிகளின் தடை முகாமில் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டனர். 35 வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள் ஒரு பக்கமும் வயது முதிர்ந்தவர்களும் குழந்தைகளும் மறுபக்கமாகவும் பிரிக்கப்பட்டனர். 10 வயதிலிருந்து 35 வயதிற்கு உட்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற அனுமதி மறுத்ததோடு அவர்களை தென்மராட்சிக்கும் வல்வட்டித்துறைக்கும் போகும்படி வற்புறுத்தப்பட்டனர்.

புலிகளால் இந்த இளைஞர்கள் நிர்பந்தித்து அழைத்துச் செல்லப்பட்ட போது அவர்களின் பெற்றோர்கள் கதறி அழுதனர். ஆனால் புலிகளின் உத்தரவுப்படி செய்வதைத் தவிர இவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. அப்படி புலிகளுக்கு அடிபணிய மறுத்தால் போகும் காட்டுப் பகுதியில் எங்களை சுட்டு கொன்று விட்டு சிங்கள இராணுவம் மீது பழியைப் போட்டு விடுவார்கள். கண்ணீரிலும் இரத்தத்திலும்தான் இப்போது புலிகள் வாழ்ந்து வருகின்றனர். மக்களின் பொது நன்மைக்காக புலிகள் எப்போதும் போராடவில்லை. அவர்களின் சுயநலத்துக்காகதான் போராடுகிறார்கள்.

## ஆழ்கடலுக்கும் பேய்க்கும் இடையில் தமிழர்

தன் வாழ்வின் ஒரு பகுதியையும் யாழ்ப்பாணத்தில் கழித்த 50 வயதான தபால் நிலைய அதிபர் கூறியதாவது, ஒரு பக்கம் புலிகள் மறுபக்கம் இராணுவம், ஆழ்கடலுக்கும் பேய்க்கும் இடையில் நாம் சிக்கி உள்ளோம்.

20 வருடத்துக்கு முன்பு மிகவும் அமைதியாகவும் சுபிட்சமாகவும் எமது ஊர் இருந்தது. புலிகளின் ஆயுத கலாச்சாரத்தால் எல்லாவற்றையும் இழந்து விட்டோம். அரசுடன் புலிகளின் பேச்சுவார்த்தையின்போது 100 நாட்கள் மன அமைதியுடன் இருந்தோம். புலிகள் அந்த அமைதியை குலைத்துவிட்டு எம்மை இந்த மோசமான நிலைக்கு தள்ளி விட்டனர். 90 சதவீதமான யாழ்ப்பாண மக்கள் யுத்த நிறுத்தத்தை மீறியதற்காக புலிகளை மன்னிக்கவே மாட்டார்கள் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். பெரும்பான்மையான தமிழ் மக்கள் இப்போது புலிகளை வெறுக்கின்றனர். புலிகளின் சர்வாதிகாரத்தன்மை மக்களுக்கு பெரும் கஷ்டத்தையும் மனவேதனையையும் கொடுக்கிறது. புலிகள் எங்கள் குடும்பங்களை மட்டும் குலைக்கவில்லை. எமது எதிர்கால சந்ததியினரையும் சொத்துக்களையும் அழித்து விட்டனர்.

9க்கும் 14க்கும் இடைப்பட்ட வயதினரை உளவியல் ரீதியாக பாதிக்கும் வகையில் பாடசாலைகள் முன்பாகவும் பொது இடங்களிலும் ஒலிபெருக்கி மூலம் பிரச்சாரம் செய்து சிறுவர்களை கவர்ந்து புலிகள் அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அர்த்தமற்ற யுத்தத்தில் இந்த சிறுவர்களை ஈடுபடுத்துகின்றனர். பிரபாகரனின் மகன் சார்ல்ஸ் அன்டனிக்கு அமைதியான வாழ்க்கை வாழ வகை செய்யப்பட்டுள்ளது. பிரபாகரனின் மகன் பஜேரோ வாகனத்தில் பிரபாகரனின் மெய்க்காப்பாளர்களால் பாதுகாப்புடன் புனித ஜோன் கல்லூரிக்கு அழைத்து வரப்படுகிறார். மெய்க்காப்பாளர்கள் கல்லூரி முடியும் வரை வாசலில் காவல் இருந்து அழைத்துச் செல்லப்படுகிறார். பிரபாகரனின் மகனுக்கு பாடம் போதிப்பதற்காக கல்லூரி விரிவுரையாளர்கள் பிரபாகரனின் வீட்டுக்குச் சென்று பிரபாகரனின் மகனுக்கு பாடம் நடாத்துகின்றனர். பிரபாகரன் ஒரு சர்வதிகாரியே தவிர விடுதலைக்காக போராடுபவர் அல்ல.

## இன்றைய மோசமான நிலைக்கு காரணம் யார்

வவுனியாவில் அகதியாக தஞ்சம் புகுந்துள்ள உயர் வழக்கறிஞர் ஒருவர் கூறியதாவது, இன்றைய இந்த மோசமான நிலைக்கு பிரபாகரனை மட்டும் குறை சொல்ல முடியாது. பிரபாகரனை சர்வாதிகாரியாக உருவாக்கியது முன்னாள் ஜனாதிபதி கே.ஆர்.ஜெயவர்த்தனாதான். இவரைத் தொடர்ந்து வந்த பிரேமதாசவும் நேரடியாக ஆயுதங்கள் சிமெண்ட் உருக்கு போன்றவைகளை பிரபாகரனுக்கு வழங்கி பிரபாகரனின் சர்வதிகார தன்மையை உறுதிப்படுத்தினர். தமிழ் சமூகத்துக்கு தீங்கு செய்வதில் பிரபாகரன் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகிய மூவருக்கும் சம பங்கு உண்டு. இவர்களின் குரூர அரசியல் விளையாட்டிற்கு ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் பலியானர்கள்.

## புலிகளின் செயல் புரியவில்லை

சண்டை தொடங்கிய காலம் முதல் யாழ்ப்பாணத்தில் இருந்த கத்தோலிக்க பாதிரியார் கூறியதாவது, பேச்சுவார்த்தையின் போது துன்பங்கள் தீர்ந்து அமைதி திரும்புவதாக மக்கள் நம்பினார்கள், ஆனால் புலிகள் பிடிவாதமாக யுத்தத்தை மேற்கொண்டதால் மக்கள் எதிர்பார்த்த அமைதி கிட்டவில்லை. புலிகள் ஏன் இதனைச் செய்தார்கள் என்று எனக்கு புரியவில்லை. சிங்கள முஸ்லிம் மக்களுக்கு எதிராக மோசமாகவும் பயித்தியக்காரத்தனமாகவும் மட்டுமல்ல. தமிழ் இனத்துக்கும் எதிராகத்தான் நடந்து வருகிறார்கள்.

●

மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு,

தங்களின் ஈழதேசம் பத்திரிகை படித்தேன். அனைத்து விடயங்களும் அருமை. தொடர்ந்து இன்னும் பல தரமான ஆக்கங்களை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றேன். ஈழ தேசம் இன்னும் மேன்மையடைய எனது வாழ்த்துக்கள்.

நன்றி

S. சுமதி
அகதிகள் முகாம்
திருச்சி.

## புலிகளை கண்காணிக்க ஐரோப்பிய கூட்டமைப்பு முடிவு

ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழர்களிடமிருந்து புலிகள் மிரட்டிப் பணம் பறித்து வருகிறது. இதுதொடர்பாக ஐரோப்பிய அரசாங்கங்களுக்கு ஈழத் தமிழர்கள் புகார் தெரிவித்துள்ளனர். மேலும் புலிகளுக்கு எதிரான கருத்து உடையவர்களும் புலிகளால் மிரட்டப்படுவதாக வந்த புகார்களையும் அடுத்து புலிகளின் நடவடிக்கைகளை தீவிரமாக கண்காணிக்க ஐரோப்பிய கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

கொழும்பு வந்திருந்த ஐரோப்பிய கூட்டமைப்பின் தெற்காசிய நாடுகளின் பிரதிநிதி பிரான்சிங் ஹெரிச் கொழும்பில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்ததோடு, போதைப் பொருள் கடத்தும் மாபியா கும்பலுடன் புலிகளுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

◆

## வடக்கு, கிழக்கு தமிழனின் தாயகமல்ல

வடக்கு கிழக்கு மாகாணத்தை தமிழர் வாழும் பிரதேசமாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று சந்திரிகா அரசு அறிவித்துள்ளது. இதையேதான் பிரதான எதிர்க் கட்சி உட்பட சகல சிங்கள கட்சிகளும் கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழனுக்கு இலங்கையில் சொந்தமாக நிலம் கிடையாது எனும் கொள்கையில் சகல சிங்கள கட்சிகளும் ஒன்றிணையும் பொழுது, இதனை எதிர்த்து போராட வேண்டிய நிலையில் உள்ள தமிழர்களின் சில மானங்கெட்ட கட்சிகள் இந்த இனவாதம் கொண்ட சிங்கள அரசுகளுக்கு காவடி தூக்குகிறார்கள். மறுபக்கம் உள்ள புலிகளோ புலிகளும் அதன் ஆதரவாளர்களும் தவிர வேறு எந்த தமிழனும் உயிருடன் இருக்கக்கூடாது என்று கங்கணம் கட்டிச் செயல்படுகிறார்கள். தமிழர்களின் இந்த ஒற்றுமையின்மைதான் எப்பொழுதும் சிங்களவர்களுக்கு சாதகமாக இருந்து வந்துள்ளது.

ஈழத் தமிழன் தமிழனாக இருக்க வேண்டுமானால் ஈழத் தமிழினத்தின் நிலம் எதுவென்று சந்தேகமின்றி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும், சிங்களவர்களால் பறிக்கப்படாமல் போற்றிப் பாதுகாக்க வேண்டும். ஆனால் தமிழர்களுக்குள் நிகழும் மோதலால் பெரும்பான்மை ஆட்சி அதிகாரத்தில் உள்ள சிங்கள இனம் சிறிது சிறிதாக ஈழத் தமிழர் நிலப்பகுதியை பறித்து வருகிறது. ஈழத் தமிழ் இனம் தன் நிலத்தைப் பறிகொடுத்து விட்டால், உலகில் வேறு எந்த பகுதியையும் உரிமை கோர முடியாது. ஈழத் தமிழ் இனம் வடக்கு கிழக்கு நிலப் பகுதியை ஆட்சி செய்யும் உரிமை உடையது. இது ஈழத் தமிழ் இனத்தின் அடிப்படை உரிமையாகும். முதலில் அனைவரும் ஒன்று சேர்ந்து பறிபோகும் ஈழத் தமிழினத்தின் நில உரிமையை வென்றெடுப்போம், அதன் பின் ஆட்சியுரிமையை யாரிடம் கொடுப்பது என்று ஈழத் தமிழ் மக்கள் தீர்மானிக்கட்டும்.

சி.ரமேஷ்
கூடல் நகர்,
மதுரை.

## தமிழர்களை வெளியேற்ற அரசு முடிவு

பாதுகாப்பு என்ற காரணத்தின் அடிப்படையில் தமிழர்கள் கொழும்பு நகரில் தினம் தினம் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். அடையாள அட்டையை கேட்கின்ற அரச படையினர் சிங்களவனா அல்லது தமிழனா என்பதை முதலில் கண்டு கொள்கின்றனர்.

தமிழன் என்று தெரிந்து கொண்டதும், கேள்வி கேட்டு சோதனையை ஆரம்பிக்கின்றனர். உடலில் ஏதாவது மறைத்து வைத்திருக்கின்றனரா என்பதை முதலில் தடவிப் பார்த்து உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். தமிழ்ப் பெண்ணாக இருந்தால் சிப்பாய் தன் சேட்டைகளையும் காண்பிக்கின்றான். பெண்ணின் கணவனோ, சகோதரனோ கேள்வி கேட்டால் துப்பாக்கிப் பிடியால் குத்துகின்றனர். கேள்விக்கு ஆங்கிலத்திலோ, தமிழிலோ பதில் சொன்னால் காது வெடிக்கும் அளவுக்கு அறைந்து விட்டு, ''மேக்க அப்பே றட்ட, சிங்கள தமாய் கத்தா கறண்டோண'' (இது எங்களுடைய நாடு. சிங்களம் தான் பேச வேண்டும்) என்று கூறி இராணுவ வாகனத்தில் ஏற்றி இராணுவ முகாமில் வைத்து உதைத்துள்ளனர். நீர்வேலியில் வெங்காயம் பயிர் செய்து வந்த விவசாயி பாலசிங்கத்திற்கு. -தமிழ் மொழி ஒன்றறைத் தவிர வேறெந்த மொழியும் தெரியாத பாலசிங்கம் ஒரு வாரம் கழித்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

இராணுவ முகாமில் இராணுவத்தினர் தமிழ் இளைஞர்களைப் பிடித்து வந்து சித்திரவதை செய்வதைக் கண்ட பாலசிங்கம் இரண்டு தடவைகள் தற்கொலை செய்து விடலாமா என்று முயற்சித்துள்ளார். தமிழர் படும் கொடுமை அப்படியானது. தமிழர்கள் மனிதர்களாக மதிக்கப்படுவதே கிடையாது. ஏனைய சிங்கள அரசுகளை விட சந்திரிகா அரசு அவ்வளவு சுதந்திரம் கொடுத்துள்ளது சிங்கள இராணுவத்திற்கு.

எந்தப் பக்கம் போய்ச் சேருவது என்று தவிக்கின்றனர் தமிழ் மக்கள். வடக்குக் கிழக்குக்கும் செல்ல முடியாது. வெளிநாடு செல்வதென்றால், பல இலட்சங்கள் வேண்டும். வசதி படைத்தவர்கள் தினமும் விமானத்தில் வெளிநாடுகளுக்கு சென்று விடுகின்றனர். ஏழைகள் பாடுதான் அடியும் உதையும்.

கொழும்பில் தமிழ் மக்களை விரட்டித் தீருவதே இராணுவத்திற்கான இப்போதைய பணி. பொலிஸ் நிலையத்தில் இருக்கும் பதிவு விபரங்களைத் தெரிந்து கொண்டு, நடு இராத்திரியில் வீட்டிற்குள் இராணுவத்தினர் நுழைந்து பணம் கேட்டு உதைக்கின்றனர். இல்லையென்றால் அழைத்துச் சென்று விசாரித்து தடுத்து வைக்கின்றனர். முறையிடுவதற்கு யாருமே கிடையாது. தமிழ் கட்சிகள் என்று இருப்பவர்களிடம் முறையிட்டால் நாங்கள் என்ன செய்கிறது, எங்களுக்கும் இதே கதிதான் என்கின்றனர்.

இனிமேல் யார்தான் தமிழ் மக்களை காப்பாற்றப் போகிறார்கள்? இலங்கையை விட்டு வெளியேறுவது தான் உயிர் தப்ப ஒரே வழி என்று கூறுகிறார்கள் அவதியுறும் தமிழ் மக்கள். இதைத்தான் சந்திரிகா அரசு எதிர்பார்க்கிறது. அதற்காகவே கொழும்பு நகரின் பாதுகாப்பை சந்திரிகா அரசு இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளது.

**போர் வெறி கொண்ட சர்வாதிகாரம் சுதந்திரத்தையும் மக்களையும் நேசிக்க தெரியாத மனநோயாகும்.**

படிப்பகம்

www.padippakam.com



# தொடரும் இனவெறியர்களின் இன அழிப்பு

கிழக்கிலங்கையின் மூதூர் பிரதேசத்தில் உள்ள குமாரபுரம் என்ற கிராமத்தில் 11-02-1996 ஞாயிறு அன்று இனவெறி கொண்ட சிங்கள இராணுவம் புகுந்து கண்மூடித்தனமான தமிழ் இன அழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டது. குமாரபுரம் என்னும் கிராமம் மூதூர் நகரில் இருந்து சுமார் 7 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள ஒரு சிறிய தமிழ்க் கிராமமாகும். ஏற்கனவே அதன் அருகாமையில் உள்ள கிராமங்களான கிளிவெட்டி, அரிப்பு, வெருகல், முகத்துவாரம் போன்ற கிராமங்களில் வசித்து வந்த தமிழ் மக்கள் பல இன்னல்களையும் இராணுவத்தினரால் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளாலும் பாதிக்கப்பட்டு அஞ்சி குமாரபுரம் கிராமத்தில் குடிபுகுந்தனர். இவர்கள் அனைவரும் மிகவும் பின்தங்கிய வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் கூலித் தொழிலாளர்கள்.

இனவெறி கொண்ட சிங்கள அரசின் கூலிப்படையினர் 11-02-1996 ஞாயிறு மாலை இக்கிராமத்திற்குள் புகுந்து கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியதில் 30 அப்பாவித் தமிழ் மக்கள் பலியாகியுள்ளனர். அத்துடன் 35க்கு மேற்பட்டடோர் வெட்டுக் காயங்களுடனும், துப்பாக்கி சூட்டுக் காயங்களுடனும் வைத்திய வசதியின்றி மிகவும் கஸ்ரப்பட்டுக் கொண்டு ஒரு இக்கட்டான நிலையை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர். கொலை செய்யப்பட்டவர்களில் இரண்டு வயது பச்சிளம் குழந்தைகள் முதல் 75 வயது முதியவர்கள் வரை உள்ளடங்குகின்றனர். பல பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டும் வெட்டிக் கொல்லப்பட்டதாக தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறான வம்ச அழிப்பு நடவடிக்கைகள் இலங்கை இனவெறிக் கூலிப்படைகளுக்கும், துவேச சிங்கள அரசுகளுக்கும் இது ஒன்றும் புதியவை அல்ல. ஏற்கனவே ஒட்டுமொத்த வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணத்தின் புன்னச்சோலை, கொக்கட்டிசோலை, திருமலையில் நிலாவெளி, தம்பலகமம், கங்குவேலி, கிளிவெட்டி, மல்லிகைத்தீவு, மேன்காமம், மூதூர் போன்ற தமிழ்க் கிராமங்கள் தோறும் மிகவும் மோசமான நிலையில் பல ஆயிரம் அப்பாவித் தமிழர்கள் வயல், தோட்டம், வீடு, பாடசாலை, வீதி, ஆலயங்கள் போன்றவற்றில் வைத்து வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் கொன்றொழிக்கப் பட்டிருக்கின்றனர். வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் கொழும்பும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள சகல கிராமங்கள் நரகங்களிலும் இந்த ஒழிப்பு நடவடிக்கைகள் அரங்கேற்றிக் கொண்டே இருக்கின்றது.

1972ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை திட்டமிட்டு நடந்து கொண்டிருக்கும் இந்த இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற சிங்கள துவேச அரசுகளும் தமது மாபெரும் பங்களிப்பை செவ்வனே நிறைவேற்றிக் கொண்டே இருக்கின்றது. ஆனால் இதில் வேதனை என்ன வென்றால் கொழும்பில் சுயநல வியாபார அரசியல் நடத்தும் தமிழ்க் கட்சிகள் கூட இவ்வின அழிப்பு நடவடிக்கைகளுக்கு துணை போவதுதான்! அரசு படைகளையும், சிங்களக் காடையர்களையும் பயன்படுத்தி எம் இனத்தை அழித்து வருவது நன்கு தெரிந்தும் தீர்வு எனக் கூறி சிங்கள ஆட்சியாளர்கள் எதையாவது சமர்ப்பிக்க அது பற்றிப் பேசுவதாக எங்கள் மக்களை ஏமாற்றுவது எப்படிப்பட்ட துரோகத்தனம் என்பதை எண்ணிப் பாருங்கள். எத்தனை சிங்களத் தலைவர்கள் எங்களுக்குத் தீர்வு காண்பித்து விட்டனர்? தமிழ் இனத்தினை அழித்துக் கொண்டே தீர்வு காண்பிப்பார்கள். காலத்துக்குக் காலம் துரோகிகள் தோன்றி சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கின்றார்கள். விடுதலைப் போராளிகள் என்று வீரம் பேசியோர் எல்லாம் சந்திரிகாவின் தாவணியில் தொங்கிக் கொண்டு உரிமை பற்றிப் பேசுவது தான் வேதனை மேல் வேதனையாகிறது. பேச்சுவார்த்தையில் பயன் எதுவும் கிடைக்கப் போவதில்லை என்பது இவர்களுக்கு நன்கு தெரியும். பணமும், பதவிகளும் கிடைப்பதை விடவா தமிழினம் பெரிது? யார் அழிந்தால் என்ன? இந்த இரண்டையும் பெற்றுக் கொள்ள அவர்களுக்குள் நடக்கும் போட்டி தான் வேடிக்கையானது. இவர்களது துரோகத்தனங்களை ஒரு உணர்வு மிக்க, தன்மானம் மிக்க எந்தத் தமிழனும் ஜீரணித்துக் கொள்ள மாட்டான் என்பதே உண்மை.




ஏற்கனவே இலங்கையை ஆண்ட சிங்கள அரசுகள் கூட இவ்வாறான கொலைகளுக்கு கண்துடைப்புகளுக்காக சில விசாரணைகள், சில விசாரணைக் குழுக்கள் போன்றவற்றை அமைத்து தங்கள் கூலிப்படைகளின் பிழைகளை ஓரளவு மூடி மறைத்தனர். ஆனால் இனவெறியின் மொத்த உருவமாக இன்று திகழும் திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கே குமாரதுங்காவின் அரசோ! இன ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் கூலிப்படைகளுக்கு விருதுகளும், பரிசுகளும், பதவி உயர்வுகளும் வழங்கி உற்சாகப் படுத்திக் கொண்டு இருக்கின்றது. ஆட்சிக்கு வரும் முன்னர் நாடு பூராகவும் நடந்த தேர்தல் பிரசாரத்தில் தன்னை ஒரு சமாதானப் புறாவாகக் காட்டிக் கொண்ட சந்திரிகா அம்மையார் மேடைகளில் பேசும்போது கூறினார்.

நானும் உங்களைப் போல் தந்தையை இழந்து தவிக்கின்றேன். நானும் உங்களைப் போல் கணவனை இழந்து கண்ணீர் சிந்துகின்றனர். நானும் உங்க



ளைப் போல் பிள்ளைகள் வளர்ப்பதில் பிரச்சனை கொள்கின்றேன். இந்த நிலை மாறவேண்டும். என்னை ஜனாதிபதி ஆக்குங்கள் உங்கள் கண்ணீரைத் துடைக்கின்றேன். உங்கள் வாழ்வின் விடிவெள்ளியாக இருக்கின்றேன் என்று கூறினார். ஆட்சிக்கு வந்தார். வந்தவுடன் விடுதலைப் புலிகள் தான் தமிழ் மக்களது பிரதிநிதிகள் என்றார். ரஜீவ் காந்தியை அவர்கள் கொல்லவில்லை என்றார். தமிழர்கள் நொந்து போயிருக்கிறார்கள். அவர்களது பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றார். இறுதியில் அடிமேல் அடியடித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினார். புலிகளைப் பயங்கரவாதிகள் என்றார். ராஜீவ்காந்தியை இவர்கள் தான் கொன்றார்கள் என்றார். எதையோ எழுதிவிட்டு இதுதான் தீர்வு என்கிறார். தேவையென்றால் தெரிவுக் குழுவுடன் பேசிக் கொள்ளுங்கள் என்கிறார். தமிழ் அப்பாவி மக்களை தாராளமாகவே கண்ணீர் சிந்த வைத்துவிட்டார். தாய், தந்தை, கணவன், மனைவி, குழந்தைகள் சொத்துக்கள் அனைத்தையும் இழந்து இனிமேல் இழப்பதற்கு எதுவுமின்றி துயரங்களைக் கண்ணீராக அழுது வடிக்கின்றார்கள் எங்கள் மக்கள். ''தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பதுபோல் தனது துயரங்களை விட மக்கள் துயரங்களில் இன்பம் காணகின்றார் சந்திரிகா அம்மையார். விடிவெள்ளியாக இருப்பேன் என்றவர் ஒரு விசவாயுவாகவே மாறிவிட்டார். வரும்போது சமாதானப் புறாவாக காட்சி தந்தார். பக்கத்தில் வந்தவுடன் பிணம் தின்னும் கழுகாக மாறினார். இதன் ஆதாரங்களே இந்த குமாரபுரம் அழிப்பு நடவடிக்கை இன்னும் நாம் இவ்வாறு நிறைய எதிர்பார்க்கலாம். சந்திரிகாவின் கூலிப்படைகளும், வியாபாரத் தமிழ் கட்சிகளும் இணைந்து நடத்தும் இந்த வம்ச அழிப்பு நாடகங்களை இலங்கைத் தீவில் நாம் இன்றும் காணலாம்.

ஆனால் ஒன்று, எம் இனம் ஒன்றுபட்டு ஒரே அணியின் கீழ் குரல் கொடுக்கும்வரை இது ஒன்றும் நின்றுவிடப் போவதில்லை.



**குமாரபுரத்தில் சிங்கள படைகளால் படுகொலை செய்யப்பட்டவர்களின் விபரம்**

(1) வடிவேல் நடராசா (22)
(2) செல்லத்துரை பாக்கியராசா (26)
(3) சுந்தரலிங்கம் லட்சுமி (31)
(4) சிவபாக்கியம் திரையந்தன் (06)
(5) பாக்கியராசா வசந்தினி (04)
(6) சுப்பிரமணியம் பாக்கியம் (30)
(7) அமிர்தலிங்கம் ரஜனி காந்தி (10)
(8) சண்முகநாதன் நிசாந்தன் (11)
(9) கனகராசா சுபாசினிராசா (15)
(10) அருணாசலம் கமலாதேவி (35)
(11) சின்னன் கோவிந்தன் (72)
(12) சுப்பையா சேதுராசா (76)
(13) வினாயக மூர்த்தி சுதாகரன் (14)
(14) துரைராசா கருணாகரன் (15)
(15) அருமைத்துரை சாந்தலட்சுமி (18)
(16) தங்கவேல் கலா (12)
(17) அழகுதுரை பரமேஸ் (30)
(18) தீபன் பத்மினி (09)
(19) சிவகொழுந்து சின்னத்துரை (56)
(20) இராமஜெயம் கமலேஸ்வரன் (13)
(21) அருமைத்துரை வள்ளிப்பிள்ளை (28)
(22) ஆனந்தன் அன்னம்மா (26)
(23) சுந்தரலிங்கம் பிரபாகரன் (11)
(24) சுந்தர லிங்கம் சுபாசினி (03)

**இழப்புக்கள் அதிகமாக அதிகமாக இலட்சியங்கள் கூர்மையடைகின்றன.**

படிப்பகம்

www.padippakam.com



# எமது குரல்

## இயலாமைக்கு இந்தியா!

விடுதலைப் புலிகளது பின்வாங்கல் நிகழ்வுக்குப் பின்னர் அதனை நியாயப்படுத்தவும், தோல்வி இல்லை எனக் காண்பிக்கவும், பலவகையில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. முதலில் அரசியல் ரீதியான வெற்றி என ஆரம்பிக்கப்பட்ட பிரசாரம் பின்னர் இந்தியா இலங்கை அரசுக்கு உதவியதால் தான் எல்லாமே கெட்டது என்று முடித்துள்ளனர். சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தில் இந்தியப் பைலட்டுகள் இருந்தனர் என்றும் அவர்களது சடலங்கள் இந்தியக் கரைகளிலே ஒதுங்கின என்றும் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதற்கும் இந்தியாவே காரணம். அவர்களது விமானமும் வந்துதான் மூழ்கடித்தது என்றும், சிங்களத் துருப்புகள் இந்திய மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர் என்றும் இந்தியா மீது பழி சுமத்துவதன் மூலம் தங்கள் தவறுகளை மறைத்து வருகின்றனர் புலிகள்.

இந்தியா இல்லை என்றால் பொடியள் சிங்கள இராணுவத்தை விரட்டி அடிச்சிருப்பார்கள் என்று புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் ஓய்வு பெற்றோர் பேசும் அளவுக்கு ஈழத்தவர் நடத்தும் பத்திரிகைகள் பொறுப்பின்றி செய்திகள் வெளியிடுகின்றன.

தமிழீழம் பற்றிய உலகப் பிரசாரத்துக்கு இந்தியா தளமாக அமைந்ததை மறந்து விட்டனர் எம்மவர். தற்காத்துக் கொள்ளப் பயிற்சிகள் வழங்கப்பட்டதை மறந்து விட்டனர் எம்மவர். பயிற்சி முடிய ஆயுதங்கள் வழங்கப்பட்டதையும் மறந்து விட்டனர். அகதிகள் அடைக்கலம் தேட வசதியாக எல்லையைத் திறந்து விட்டது இந்தியா. கள்ளக் கடத்தல் மூலம் புலிகள் இயக்கம் சம்பாதித்துக் கொள்ளட்டும் என்று வேதாரண்யம் முதல் தொண்டி வரை கஸ்டம்ஸ் கண்களை மூடிக் கொண்டல்லவா இருந்தது. மக்களுக்காக போராடுபவர்கள் என்ற நல்லெண்ணத்தில் வேண்டிய ஆயுதங்களைக் கொடுத்ததுமின்றி கடல் வழியில் பாதுகாப்புமல்லவா செய்து கொடுக்கப்பட்டது. ஜெயவர்த்தனா இந்தியாவை குற்றம் சாட்டும்போது இந்தியா அதற்காகப் பகிரங்கமாக மறுத்தல்லவா வந்தது. பயிற்சி வழங்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் சிங்கள அரசிடம் சிக்குண்டு இந்தியாதான் பயிற்சி கொடுத்தது என்று கூறிய பின்னரும் இந்தியா அதனை மறுத்தது என்பதை இப்போ யார் நினைத்துப் பார்க்கப் போகிறார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் வாழும் நூற்றுக்கு 80% மானோர் இந்தியா வழியாகத்தான் அங்கு சென்றவர்கள் என்பதனையும் மறந்து விட்டார்கள். புலிகளது வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் அனைவரும் இந்தியா வழியாகச் சென்றவர்கள்தான். இவைகள் அத்தனையும் இந்தியா செய்தது. எங்கள் மக்களின் மேல் இருந்த அனுதாபமும் நியாயங்களுமே அல்லாமல் தனிப்பட்ட ஓர் நபருக்காக அல்ல. ஈழப் போராளிகளின் பிரச்சினைகளால் இந்தியா எவ்வளவு சங்கடத்துக்கு உள்ளானது என்பதை எம்மவர் எவரும் அறிய மாட்டார்.

புலிகள் முதலில் டெலோவைக் கடித்து, புளொட்டைக் கடித்து, ஈ.பி.ஆர்.எல்.எப்.பைக் கடித்து, கூட்டணியைக் கடித்து, இறுதியில் இந்தியாவையும் கடித்தவர்கள். இவை அனைத்துக்கும் காரணங்களும் கூறியவர்கள். இந்தியாவின் துணை எவ்வளவு முக்கியமான்து என்பதனை மறந்ததின் விளைவுகள் இப்போதும் கூடத் தெரியவில்லை இவர்களுக்கு. புலிகளது தவறுகள் தூண்டப்படுவதற்கு யாழ்ப்பாணத்து மக்களும் அவர்கள் நடாத்தும் பத்திரிகைகளும், தமிழகத்துச் சில தலைவர்களும்தான் காரணமாக அமைந்தன.

நாங்கள் சிறுபான்மை இனம். எங்கள் நாட்டில் இருக்கும் பெரும்பான்மை இனத்துக்கும் அதன் படைகளுக்கும் எதிராகப் போராடுகிறோம். சிங்கள மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது ஈழத் தமிழர்கள் நான்கில் ஒரு பங்குகூட இல்லை. எங்கள் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுப் போராட வேண்டுமா? அல்லது சின்னாபின்னப்பட்டு தொகையைக் குறைத்து இறுதியில் குட்டிச்சுவராகிறதா விடுதலைப் போராட்டம்?

இன்று என்ன நடந்துள்ளது? நேருக்கு நேர் மோத இயலாத நிலையில் தற்கொலை மூலம் விடுதலைப் போர் தக்க வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலை ஏற்பட்டதற்கு புலிகளைத் தவிர வேறு யாரும் காரணமல்ல! ஈழமே வேண்டாம் என்று தமிழ்க் குழுக்கள் சந்திரிகாவிடம் சரணடைந்து துரோகம் செய்கின்றன. ஏனைய விடுதலைப் போராளிகளை கொன்று தீர்த்ததன் மூலம் புலிகளும் தமிழ் இனத்துக்குத் துரோகம் செய்தவர்கள்தான். ஏனைய இயக்கங்களை அழித்துவிடும் உரிமை தமிழ் மக்களால் புலிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரமல்ல. புலிகள் அவர்களுக்காக அவர்களால் செய்யப்பட்ட அநீதியே அது. இன்று சிங்கள அரசுடன் இணைந்து நிற்கும் அனைத்துக் குழுக்களும் தமிழினத்தின் துரோகிகளே! இதனைப் புலிகளும் முன்பு செய்தனர்! காரணங்கள் பல கூறலாம், ஆனால் செயற்பாடு இரண்டும் ஒன்றுதான்.

அன்று விடுதலைக்காக போராடிய எங்களுக்கு இந்தியா உதவியது. புலிகளது குழறுபடியால், ஆயுத பலத்தின் மூர்க்கத்தனத்தால் நண்பன் யார், எதிரியார் என்று வேறுபாடு தெரியாததால், படுகொலைகளால் யாரையும் பணிய வைத்து விடலாம் என்ற மடத்தனமான கொள்கையால் இந்தியா மௌனம் காக்க ஆரம்பித்தது. தொல்லை வேண்டாம், வெளியேறுங்கள் என்று வெறுப்படைய வைத்தது வேறுயாருமல்ல புலிகள்தான். இன்று இந்தியா மௌனம் காப்பதைப் பயன்படுத்தி தங்கள் இயலாமைக்கு காரணம் இந்தியாதான் என்று ஈழ மக்களை நம்ப வைக்கப் பிரசார சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர்.

இன்றைய ஈழப் பிரச்சினை எதிலும் இந்தியா தலையிடவில்லை. கதிர்காமரை அனுப்பி தங்கள் பக்கம் நியாயம் இருப்பதாக சந்திரிகா தெரிவித்து வருகிறார். ஏனெனில் முன்னர் போன்று ஈழத் தமிழ் மக்களுக்கு இந்தியா நேரிடையாக உதவிகள் மேற்கொள்ளவிடாது பார்த்துக் கொள்ளும் நடவடிக்கையை சந்திரிகா மிகக் கவனமாக மேற்கொள்கிறார்.

ஆனால் ஈழத் தமிழர் சார்பாக ENDLF இயக்கத்தை தவிர வேறுயாரும் இந்திய அரசை அணுகி ஆதரவு தேடவில்லை. TULF உட்பட அனைத்துக் குழுக்களும் சந்திரிகாவிடம் பிச்சை கேட்டு காலம் தள்ளுகின்றன. இந்தியாவின் உதவி ஈழ மக்களுக்குக் கிடைத்தால் மட்டுமே ஈழம் சாத்தியமாகும். இல்லையேல் நாம் நீண்ட காலத்தை வீணடிக்க வேண்டிவரும். அடித்தளமே அழிந்துபோனபின் வழித்தோன்றல்களை எங்கே தேடுவது. மூத்த குடிமக்கள் பலர் ஒதுங்கியிருக்கின்றனர். வேறு பலரோ புலிகளுக்கு கொம்பு சீவுவதில் தங்கள் பிழைப்பை நடத்துகின்றனர். பெயரும் புகழும் கிடைக்கிறது என்பதால் தானாக விளக்கங்களை மக்கள் மத்தியில் விதைத்து வருகின்றனர்.

நடந்து முடிந்தவற்றை நினைத்துப் பாருங்கள். இனிமேல் நடக்க வேண்டியதைச் சீர்தூக்கிப் பாருங்கள், உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள். வெட்கங்களை, கௌரவங்களை, மூர்க்கத்தனங்களை, பதவி வெறிகளை, படுகொலை ஆசைகளை விட்டுத் தள்ளுங்கள். எம்மினத்தின் நண்பர்கள் யாரென்று கண்டு கொள்ளுங்கள். தவறுகளை ஏற்றுக் கொள்ளுங்கள். இது நடந்தால் எங்கள் மக்களுக்கு விமோசனம் உண்டு. இல்லையேல் மரண அறிவித்தல்களைத்தான் தொடர்ந்தும் எம்மவர் படிக்க வேண்டிவரும், மிஞ்சியோர் கலப்பட இனமாகிவிடுவர்.

ஆசிரியர் : சி. தயாபரன்
வெளியிடுபவர் : அ. குமரப்பன்
முகவரி : 6/7, பூர்ணிமா குடியிருப்பு,
இரண்டாவது பிரதான சாலை,
யுனைட்டெட் இந்தியா காலனி,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

## புத்த பிக்குகளுடன் தமிழ் குழுக்கள்

மல்வத்தை மகா நாயக்க தேரோ ரம்புத்வெல சிறி விபுல சார தேரோவைக் கொழும்பு தமிழ்க் கட்சிகளான EPRLF, PLOT, EKOS, TELO, EPDP ஆகிய ஐந்து கட்சிகளும் இணைந்து சந்தித்தனர். ''அவரிடத்தில் ஆட்சி செய்து வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களது உரிமைகளை நசுக்கி வந்தன. நீதி கோரிய இயக்கங்களை அரசு நசுக்கி, அழித்து வந்ததன் விளைவே ஆயுதப் போராட்டமாக வெடித்தது,'' என்று நல்லபடியாக எடுத்துச் சொன்னார்கள்.

ஏனென்றால் இவை எல்லாம் தேரோவுக்குத் தெரியாத ஒன்று என இவர்கள் நினைத்துள்ளனர். பாவம் இவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. பிரேம தாசாவால் வளர்த்து விடப்பட்ட தலைவர்கள் தானே இவர்கள். புத்த பிக்குகளைச் சாமியார்கள் என்று எண்ணியுள்ளனர். அவர்கள் தான் இலங்கை அரசியலை கடந்த ஐம்பது ஆண்டுகளாக அல்ல பல நூற்றாண்டுகளாக ஆட்டிப் படைப்பவர்கள் என்பது புதிய தமிழ் துரோகிகளுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்.

தமிழ் மக்களுக்கு வந்த வினை அனைத்தும் இந்தப் புத்த பிக்குகளால் தான். ஆட்சியாளர்கள் வெறும் பதவிப் பிரியர்கள் மட்டுமே. இராணுவத்தின் நடவடிக்கைகள், சிங்களக் குடியேற்றங்கள், அரசியலதிகாரப் பறிப்புகள், தொழில், மொழிப் பறிப்புகள் அனைத்தையும் தீர்மானித்துச் செய்து முடிப்பது இந்தப் புத்த தேரோக்கள்தான்.

பிரேம தாசா இறந்த பின் சந்திரிகாவின் தாவணியில் தொங்கும் மேற்சொன்ன இவர்கள், அரசியல் அதிகாரம் பற்றி ஜனாதிபதியுடன் பேச வேண்டியதுதானே. எதற்காகப் புத்த துறவிகளிடத்தில் அலைகின்றனர்? அப்படியாயின் சந்திரிகா தன்னால் முடியாது என்று கையைக் காண்பித்து விட்டார் என்பது தானே இதன் அர்த்தம்.

சந்திரிகா ஐந்து சதத்துக்கும் இவர்களை மதிப்பது கிடையாது. நாயாக அலைகின்றார்கள் இவர்கள். பணம், பாதுகாப்பு, இருப்பிடம் அனைத்துக்குமே சந்திரிகாவின் பின்னால் அலைந்தால்தான் உண்டு. இவர்கள் மூலமாக தமிழ் மக்களுக்கு என்னதான் கிடைக்கப் போகின்றது? தமிழ் மக்களது போராட்டம் பின் தள்ளப்படுவதைத்தான் இவர்களால் செய்ய முடியும்,'' கால பீலா அப்பிடபோம்ப தியனவத'' என்று கூறி இவர்கள் ஒரு நாள் கொழும்பை விட்டு விரட்டப்படுவார்கள். போவதற்கு இடமின்றி , தவிக்கப் போகிறார்கள் இவர்கள்.



இலங்கை இராணுவத்தில் சேரும் பௌத்த துறவிகள்

ஜனநாயக வழி முறைகளுக்கு மதிப்பளித்து தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை பலப்ப டுத்துவோம்.

படிப்பகம்